# பாரதம் கம்யூனிஸ்ட் நாடாக மாறமாட்டாது: பிரதமர் இந்திரா அறிவிப்பு

Registered as a News paper in Ceylon ... 15

★ ★

ஈழநாடு

THE EELA NADU

மலா 11
இதழ்: 217
தேசிய தினசரி

தபால் பெட்டி எண் 49
போன்: 389
National Tamil Daily

யாழ்ப்பாணம் புரட்டாதி 1 றஜப் 4 புதன்கிழமை [17-9-69]

நல்லூர் கந்தசுவாமி கோயில்
திருவிழாவின் போது
தேர்முட்டிக்கு முன்பாகவிருந்த
காட்சிச்சாலையில் நீங்கள் பார்த்த

யுனிக்

டிரான்ஸிஸ்ரர்
றேடியோக்களை
எமது ஸ்தாபனத்தில்
பெற்றுக்கொள்ளலாம்.

V.K. இராசரத்தினம்
95, ஸ்ரான்லி றேட்,
யாழ்ப்பாணம். 1751

புதுடில்லி, செப். 16

**பாரதம் ஒருபோதும் கம்யூனிஸ்ட் நாடாக மாறமாட்டாது என்றும் பாரத நாடு சுதந்திரத்தில் நம்பிக்கை வைத்துள்ள ஒரு நாடு என்றும் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இன்று அறிவித்தார்.**

புதுடில்லியில் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாரத மக்கள் சாத்வீகத்திலும் சமாதானத்திலும் பற்றுக் கொண்டுள்ளார்கள் எனத் தெரிவித்த திருமதி இந்திரா பத்திரிகைகள் தேசியமயமாக்கப்பட மாட்டாது என உறுதிகூறினார்.

தாம் இடதுசாரிக் கொள்கையை அனுசரித்து நடப்பதாகக் கூறப்படுவதை அவர் ஏற்றுக்கொண்டார். பொதுமக்களின் நலனுக்காகவே சில நடவடிக்கைகளை கட்டாயமாக எடுக்கவேண்டிய அவசிய மேற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## ரூ. 1 லட்சம் பொருள்கள் கைப்பற்றப்பட்டன

மாவிட்டபுரம், செவ்.

பருத்தித்துறை ஆழ்கடலில் வைத்து நேற்றிரவு காரைநகர் கடற்படையினர் ஒரு லட்சம் ரூபச பெறுமதியான கள்ளக் கடத்தல் பொருட்களைகைப்பற்றினர்.

இது சம்பந்தமாக ஐவர் கைது செய்யப்பட்டனர்

காரைநகர் கடற்படையைச் சேர்ந்த லெப்டினன்ட் எம். எச். வெலிவெற்றிகொடையின் தலைமையில் ரோந்து சுற்றிவந்த கடற்படையினர் பருத்தித்துறை ஆழ்கடலில் வைத்து இயந்திரக் கட்டுமரத்தைச் சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டபொழுதே அக்கட்டுமரத்தில் சுமார் ஒருலட்சம் ரூபா பெறுமதியான துணிவகைகளும் றேடியோ உபகரணங்களும் இருக்கக்கண்டு பிடிக்கப்பட்டது.

கடற்படையினர் கட்டுமரத்தையும் அதிலிருந்த பொருட்களையும் கைப்பற்றியதுடன் அதிலிருந்த ஐவரையும் கைது செய்தனர்.

ஐவரும்வடபகுதியில் உதவிச் சுங்க கலெக்டர் திரு கே. கந்தசாமி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். விசாரணை நடத்திய உதவிச் சுங்க கலெக்டர் திரு கே. கந்தசாமி கைப்பற்றப்பட்ட ஒருலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களையும் இருபத்திஐயாயிரம் ரூபா பெறுமதியான இயந்திரக் கட்டுமரத்தையும் பறிமுதல் செய்யும்படியும் படகுச் சொந்தக்காரரை 400 ரூபா அபராதம் செலுத்தும்படியும் மற்ற நால்வரையும் தலா 300 ரூபா அபராதம் செலுத்தும்படியும் உத்தரவிட்டார்;

[illegible]

உடுப்பிட்டி, புதன்

அகில இலங்கைச்சிறுபான்மைத்தமிழர் ஐக்கிய முன்னணியின் 4-வது வருடாந்தக் கூட்டம் நாளை யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது.

# 3-ம் நாளாக சாகும்வரை உண்ணுவிரதம்

# "அறப்போராட்டம் மூலம்தான் பட்டதாரிகள் பிரச்னை தீரும்"

## கோப்பாய் எம். பி. கருத்து

கோப்பாய், புதன்

'பட்டதாரிகளின் வேலையற்ற பிரச்னை அறவழிப் போராட்டங்கள் மூலம்தான் தீர்க்கமுடியும். தொடர்ந்து இப்படியானபோராட்டங்கள் நடைபெறவேண்டும்' என்று கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை தெரிவித்தார்.

தமது வீட்டின் முன்னால் சாகும்வரை உண்ணுவிரதத்தை ஆரம்பித்திருக்கும் திரு. கே. சதானந்தனைச் சந்தித்த பின்னரே மேற்கண்டவாறு கூறினார்.

இரண்டாம் நாளாக திரு. கே. சதானந்தனின் உண்ணுவிரதப் பாராட்டம் நேற்று தொடர்ந்து நடந்துகொண்டிருந்தது திரு. சதானந்தன் நேற்று முன்தினமிரவு நடந்த தனது தங்கையின் திருமணத்திலும் கலந்துகொள்ளவில்லை. சங்க அங்...

கோப்பாய் எம். பி. திரு. கதிரவேலுப்பிள்ளை மேலும் கூறியதாவது:

'கடந்த நான்கு ஆண்டு காலமாக வேலையில்லாபட்டதாரிகள் பிரச்னை குறித்து பாராளுமன்றத்திலும் தனிப்பட்ட அமைச்சர்களுடனும் எம்மாலியன்றவரை பேச்சுவார்த்தை நடாத்தியும் எவ்வித பலனும் காணமுடியாது போய்விட்டது எனவே இன்றைய நிலையில் இப்பிரச்னைக்குத் தீர்வுகாண்பதாயின் இத்தகைய அறவழிப் போராட்டங்கள் தொடர்ந்து நடைபெறவேண்டும் அத்துடன் பொதுஜன அபிப்பிராயமும் சேரவேண்டும்''

இன்று மாலை உத்தியோகபூர்வமான சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெறலாமெனத் தெரிகிறது.

...விரதப் போராட்டத்தில் தானும் கலந்துகொள்வதாக கோப்பாய் எம். பி. தம்...

## பஸ் பிரயாணிகள் 5 மைல் நடந்துசென்றனர்

### சங்குப்பிட்டியில் சம்பவம்

யாழ்ப்பாணம், புதன்

சங்குப்பிட்டி, வாடியடி பஸ் சேவை நேற்று நடுவழியில் பழுதடைந்ததால் சுமார் நூற்றுக்கணக்கான பிரயாணிகள் கடும் வெயிலில் சுமார் 5 மைல் தூரம் பாதயாத்திரை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது கர்ப்பிணிப் பெண் ஒருவரும், வயோதிப நோயாளி ஒருவரும் உட்பட சுமார் 100 பிரயாணிகள் நேற்றுக் காலை சங்குப்பிட்டித் துறையிலிருந்து வாடியடிக்கு நடந்து சென்றனர்.

கேரதீவுக்கும் சங்குப்பிட்டிக்குமிடையில் உள்ள பாதை நேற்று சேவை செய்யாததால் 3 வண்டில்களும், 4 கார்களும், 1 வானும், 2 லொறியும், ...றுப் போய்விட்டதால் பிரயாணிகள் நடந்து வந்தனர். வேறு மேலதிக டயர் இல்லை என்றும், கிளிநொச்சியிலிருந்து வேறு டயர் வந்த பின்னரே பஸ் புறப்படும் என்று பஸ் கண்டக்டர் பிரயாணிகளிடம் தெரிவித்தார்.

படகில் சங்குப்பிட்டியை வந்தடைந்த பிரயாணிகள் வேறு வழியின்றி சுமார் 5 மைல் நடந்துசென்றனர். சில பிரயாணிகள் தங்கள் பிரயாணத்தை மேற்கொள்ளாமல் திரும்பிவிட்டனர்.

சங்குப்பிட்டியிலிருந்து கேரதீவு கரைக்கு படகில் வரும் பிரயாணிகளுக்கு உடனடியாக பஸ் சேவை கிடைக்காததால் நீண்ட...

## தடை நீங்கியது

யாழ்ப்பாணம், புதன்


இந்தியா முதலிய நாடுகளுக்கு ரூ.50 மதிப்புக்குஉட்பட்ட புத்தகம், சஞ்சிகை, பத்திரிகை பார்சல் அனுப்புவதற்கு ஏற்றுமதி பர்மிட் வாங்க வேண்டுமென்றிருந்த தடையை சென்ற 11ந்திகதியிலிருந்து நீக்கிவிட்டனர். ஆனால் ரூ 10க்கு மேற்பட்ட பார்சலை அனுப்ப 'எக்ஸ்சேஞ்ச்' பர்மிட் பெறவேண்டும். ரூ. 10க்குக் குறைந்த புத்தகம் பத்திரிகை முதலிய பார்சலுக்கு அந்தப் பர்மிட்டும் தேவையில்லை என்று தபால் இலாகா சுற்றறிக்கை தெரிவிக்கிறது.

---

...

கோப்பாய், செவ்வாய்

கோப்பாய் கி. சவக்குச் சொந்தமான செம்...



சந்திரனில் முதன் முதலாக காலடி எடுத்து வைத்த விண்வெளி வீரர்களுடன் அமெரிக்க ஜனாதிபதி திரு. நிக்சனுடன் காணப்படுகிறார்கள்.

## ...ந்தி நாற்றாண்டு விழா

## பொங்கல் விழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேரதீவுக்கும் சங்குப் பிட்டிக்குமிடையில் உள்ள பாதை நேற்று சேவை செய்யாததால் 3 வண்டில் களும், 4 கார்களும், 1 வானும், 2 லொறியும், 1 டிராக்டரும் நேற்று திரும்பிச் சென்றன. கால நிலை சரியாக இல்லாததால் பாதை சேவைக்கு விடப் படவில்லை என பிரயாணி களுக்கு அறிவிக்கப்பட்டது. இதன்பின் படகு மூலம் பிரயாணிகள் கேரதீவி லிருந்து சங்குப்பிட்டித் துறைக்குச் சென்றனர். இருமடங்கு பிரயாணிகளை ஏற்றிச் சென்றதால் படகு ஆபத்தான நிலையில் சங்குப் பிட்டியை சென்றடைந் தது.

கிளிநொச்சியிலிருந்து சங் குப்பிட்டிக்கு காலை 8-30 மணிக்கு வந்து சேரும் பஸ் துறைக்கு 2 மைல்களுக்கு அப்பால் முன் டயர் காற் னர்.

சங்குப்பிட்டியிலிருந்து கேரதீவு கரைக்கு படகில் வரும் பிரயாணிகளுக்கு உடனடியாக பஸ் சேவை கிடைக்காததால் நீண்ட நேரம் காத்துநிற்கவேண் டிய நிலை ஏற்படுகிறது. அதிகமான பிரயாணிகள் கூடிய பணம் கொடுத்து தனிப்பட்ட வானில் செல் கின்றனர். சாவகச்சேரிக் கும் கேரதீவுக்கும் பஸ் கட்டணம் 40 சதமாக இருக்கும்போது வானுக்கு 50 சதம் கொடுத்துச் செல கின்றனர்.

பஸ் சேவை அடிக்கடி பழுதடைவதால் பிரயாணி கள் கஷ்டப்படுகின்றன ரென்றும், ஒரே ஒரு பஸ் தான் சங்குப்பிட்டிக்கும் வாடியடிக்குமிடையில் சேவை செய்வதாகவும் பிர யாணி ஒருவர் தெரிவித் தார்.

# அரசாங்க சேவையில் 38,000 வெற்றிடங்கள்

## இன்னும் நிரப்பப்படவில்லை

கோட்டை, செவ்வாய்

அரசாங்க சேவையில் 38,000 வெற்றிடங்கள் நிரப்பப்படாமலிருக்கின் றன. இவ்வருடம் அக்டோ பருக்கிடையில் இந்தவெற்றி டங்கள் யாவும் நிரப்பப்படு மென ஏற்கனவே நீதியமை ச்சு தீர்மானித்திருந்தும் இதற்கான நடவடிக்கையை இதுவரை மேற்கொள்ள வில்லை.

அரசாங்க இலாகாக்களு க்கு நிதியமைச்சு மேற்படி வெற்றிடங்கள் சம்பந்தமாக அறிவித்திருந்தும் இவ்விலா காக்களின் அதிபர்கள் பல வருடங்களாகக் கூட நிரப் பப்படாத வெற்றிடங்களுக் கான நியமனங்களை இன் னும் செய்யவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க இலாகா அதிப ர்களுக்கு நிதியமைச்சு வெற் றிடங்களுக்கு விரைவில் நிய மனம்வழங்கவேண்டியஒழுங் குகளை அறிவிக்கவுள்ளதாக நிதியமைச்சைச் சேர்ந்த வட்டாரங்கள் தெரிவித்துள் ளன.

வேலையற்றவர்களுக்கு வேலை வழங்குவதற்காக மேற்கொண்ட ஆய்வின்பல ஞகவே மேற்படி வெற்றி டங்கள் பற்றிய விபரம் தெரியவந்துள்ளது. உட னடியாக இவ் வெற்றிடங் களை நிரப்புவதற்காகன நட வடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன.

# சங்கானை கலவர வழக்கில் எதிரிகள் விடுதலை

யாழ்ப்பாணம், செவ்.

சங்கானை கலவர வழக்கில் எதிரிகள் ஏழு பேரையும் யாழ்ப்பாண மாவட்ட நீதி பதி ஜனுப் ஐ. எம் இஸ்மயில் நேற்று விடுதலை செய் தார். விடுதலை செய்வதற் கான காரணங்களை இம் மாதம் 22-ம் தேதி தெரி விப்பதாகவும் நீதிபதி தீர்ப் பளிக்கும் போது தெரிவித் தார்.

இவ்வழக்கில் 68-ம்ஆண்டு பெப்ரவரி 1ம்-ம்தேதி சங் கானை வழக்கில், எஸ். திரு நாவுக்கரசு, எம். திருவா திரை, கோவிந்தன், ஆறு முகம்பிள்ளை, ரி. தவராசா, கணபதி சுப்பையா எம் தர்மலிங்கம், ரி. சிவபாதசுந் தரம், ஆகிய 7 பேரும் பயங்கர ஆயுதங்களுடன் சட்டவிரோதமாகக்கூட்டம் கூடி நிற்சாமத்தைச்சேர்ந்த கார்த்திகேசு இராசதுரை என்பவருக்குக்காயம் விளை வித்ததாகக்குற்றம் சாட்டப் பட்டுள்ளது,

1-ம், 2-ம், 4-ம், 6-ம், 7-ம் எதிரிகள் சார்பில் அட்வக் கேட் எஸ். சிவபாக்கியநா தனும், 3-ம், 5-ம் எதிரிகள் சார்பில் புறக்டர் ஆர். ஜே செல்வரத்தினமும் ஆஜரா ஞர்கள்.

விரதப் போராட்டம் நேற்று தொடர்ந்து நடந்துகொண் டிருந்தது திரு. சதானந் தன் நேற்று முன்தினம் நடந்த தனது தங்கையின் திருமணத்திலும் கலந்து கொள்ளவில்லை. சங்க அங் கத்தவர்களும், பொது மக் களும் கூடியிருந்தனர்.

பூரணமான சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடை பெறலாமெனத் தெரிகிறது.

வேண்டுமானால் உண்ணா விரதப் போராட்டத்தில் தானும் கலந்துகொள்வதாக கோப்பாய் எம். பி. தம் மிடம் தெரிவித்ததாக திரு சதானந்தன் தெரிவித்தார்.

அசைஸ்விசாரணை முடிவில்

# சகல ஊழியருக்கும் நீதியரசர் பாராட்டு

யாழ்ப்பாணம், புதன்

வடபகுதிஅசைஸ் கோர்ட் டின் இரண்டாவது பருவத் திற்கான விசாரணை நேற்று முன்தினம் முடிவடைந்தது. விசாரணை முடிவின்போது நீதிஅரசர் திரு ஓ. எல். டி. கிரெஸ்டர் பேசுகையில் கூறியதாவது:

'இந்த அசைஸ் நீதிமன்ற லிகிதரானதிருசபாரத்தினம் மிகுந்த அனுபவம் வாய்ந்த வர். அவர் தமது அனுபவ முதிர்ச்சியினுல் இந்த நீதி மன்ற வெலைகள் யாவையும் ஒழுங்காகத் தொடர்ந்து நடைபெறுவதற்கு உதவி ஞர். இந்த அனுபவம் வாய் ந்த லிகிதருக்கும் மற்றும் அமைதியாகவும் ஒழுங்காக வும் தங்கள் வேலையைக் கவ னித்த தட்டெழுத்து, சுருக் கெழுத்தாளர்களுக்கும் எனது நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்ளுகி றேன்.'

பொலிசார் இவ் விசார ணைக் காலத்தில் செய்தஒழு ங்குகளுக்கும் உதவிக்கும் நன்றி தெரிவித்த நீதியரசர் முடிக்குரிய வழக்கறிஞருக்கு நன்றி தெரிவிக்கையில் அவ ருக்கு முதல் அனுபவமான வெளியூரில் நடைபெற்ற இந்த அசைஸ்விசாரணையும், ஒன்றுக்குமேற்பட்ட நீதியர சர்களின் முன்னிலையில் அவர் தோற்றியுள்ளமையும் அவருக்கு நல்ல அனுபவத் தைக் கொடுத்துள்ளது எனக் குறிப்பிட்டு இந்த அனுபவம் அவருக்கு வருங் காலத்தில் நன்மையளிக்கு மெனவும் கூறித் தமது நன் றியை அவருக்கும் தெரிவித் தார்.

சிறந்த சேவையாற்றிய பிஸ்கால் உத்தியோகத்தர் களில் ஒருவரான திரு. சுப் பிரமணியத்தின் சேவையை யிட்டு பாராட்டுவதாகவும், அதேநேரத்தில், அடுத்த தடவை தான் இங்கு வரும் போது, அவரின் சேவை கிடைக்காவிடில் அதுதமக்கு கவலையை யளிக்குமென்றும் நீதியரசர் தெரிவித்தார்.

மற்றும் வழக்கறிஞர்கள் யாவருக்கும் நன்றிதெரி வித்த நீதியரசர் இறுதியில் பருவகால விசாரணை முடி வடைவதாகப் பிரகடனம் செய்தார்.

# தனியார் நிறுவனங்களில் 10,500பேருக்கு வேலைவாய்ப்பு

கோட்டை, செவ்

தொழிலமைச்சு தனியார் நிறுவனங்களில் 10,500 பேருக்கு வேலைவாய்ப் பளிக்க விருக்கிறது.

தனியார் துறைகளில் வேலைவாப்புச் சம்பந்தமாக ஆராய்வதற்கு நியமிக்கப் பட்ட குழுவின் தலைவரான தொழில் ஆணையாளர் திரு ஹேலன்ட் விஜேவிக்கிரம தனியார் துறைகளிலுள்ள வெற்றிடங்கள் சம்பந்த மாக ஆராய்ந்து புள்ளி விப ரங்கள் திரட்டியுள்ளார். இதன்படி 70 வீத வெற்றி டங்கள் கொழும்புப் பகுதி யில் உள்ளதாகவும் மிகுதி தலைநகரங்களுக்கு வெளியில் உள்ளதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

1970-ம்ஆண்டிலும் தனி யார் துறைகளில் வேலை வாய்ப்பளிப்பதற்காக ஆய்வு நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## கோணேசர் முடியும் கௌரி தாலியும் திருட்டு

மூதூர், செவ்வாய்

சரித்திரப் பிரசித்திபெற்ற கோணேசர் ஆலயத்தில் பட்டப்பகலில் துணிகரத் திருட்டு நடைபெற்றுள்ள தாக அறிவிக்கப்பட்டுள் ளது.

கோணேஸ்வர மூர்த்தி யின் தலையில் இருந்த கிரீட மும் கௌரி அம்மன் கழுத் திலிருந்த தாலியும் திருடப் பட்டதாகத்தெரிகிறது.

கோப்பாய், செவ்வாய்

கோப்பாய் கி. சவுக்குச் சொந்தமான செம்மணிப் புதுத்தெருவில் உள்ளூராட்சி அமைச்சால் அமைக்கப் பட்டு வரும் பால வேலைகள் நீண்ட காலமாக முற்றுப் பெருதகாரணத்தால் போக் குவரத்துக்குக்கஷ்டமாகவுள் ளதாம். இதனை உடன் கவ னித்து ஆவன செய்து தரு மாறு யாழ். அரசாங்க அதி பர் திரு. பிரான்சிஸ் பீற்றர் ஸிடம் செம்மணி பயிர்ச் செய்கைக்குழு கேட்டுள் ளது.

## 500 பிணையில் செல்ல அனுமதி

மல்லாகம், செவ்வாய்

மனைவியின் சகோதரியைக் கடத்திக் சென்றதாக குற் றஞ்சாட்டப்பட்ட பலாலி யைச் சேர்ந்த வேலாயுதம் என்ற நபரை காங்கேசன் துறைப்பொலிசார் நேற்று மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமார சாமி முன்னிலையில் ஆஜர் செய்தபோது ரூபா 500 பிணையில் செல்ல அனுமதி த்து மீண்டும் இம்மாதம் 30-ந் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவிட் டுள்ளார்.

கடத்திச் செல்லப்பட்ட தாககூறப்படும் யோகேஸ் வரி (வயது 14) என்ற இளம் பெண்பெற்ருேருடன் செல்ல மறுத்ததால் இரட் சணியசேனை முகாமில் றிமாண்டில் வைககப்பட் டார்.

## பெண்ணுக்கு ரூ 25 அபராதம்

மல்லாகம். செவ்.

சட்டவிரோத வடிசாரா யம் வைத்திருந்த குற்ற த்தை ஒப்புக்கொண்ட பூர ணம் என்ற பெண்மணிக்கு மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி ரூபா 25 அபராதம் விதித் தார். அச்சுவேலி கலால் பகுதியினர் இவ்வழக்கைத் தொடர்ந்திருந்தனர்.

## ஒத்திவைப்பு

மல்லாகம், செவ்வாய்

மாவிட்டபுரம்கந்தசுவாமி கோயில் ஆலயப் பிரவேச வழக்குகளின் விசாரணையை மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எஸ். ஆனந்தகுமார சாமி அடுத்தமாதம் 8-ந் திகதிக்கு ஒத்திவைத்துள் ளார்.



சந்திரனில் முதன் முதலாக காலடி எடுத்து வைத்த விண்வெளி வீரர்களுடன் ... ரிக்க ஜனாதிபதி திரு. நிக்சனுடன் காணப்படுகிருர்கள்.

# காந்தி நூற்றுண்டு விழா விரிவான ஏற்பாடுகள்

கோட்டை, புதன்

செனட் சபைத் தலைவர் திரு. ஏ. ரத்னயக்காவின் தலைமையில் விரிவான அடிப் படையில் இலங்கையில் பொதுப்பணிகள் பலவ ற்றை நிறைவேற்றுவதற்கு இலங்கை காந்தி நூற்றுண்டு விழாவுக்கான தேசியக் கமி ட்டி திட்டம் தயாரித்திருக் கின்றது.

காந்திய வழியில் தலைவர் களைத் தயார் செய்வதற்கு பயிற்சி நிலையங்களை உரு வாக்குவதும், இலங்கை தேசிய சர்வோதய சிரம தான இயக்கத்தின் மூலம் 100 கிராமங்களை அபிவிரு த்தி செய்வதும், மகாத்மா காந்தியின் வாழ்க்கைச் சரி த்திரத்தை சிங்களத்தில் மொழிபெயர்ப்பதும், காந் திய சீடர்களான ஜெயப் பிரகாஷ் நாராயண, ஆச்சா ரிய விநோபா போன்றவர் களின் நூல்களை மொழி பெயர்ப்பதும் இந்தத் திட் டத்தில் அடங்கும் முக்கிய அம்சங்களாகும். இம்மாதம் 9-ம் திகதி முதல் மகாத்மா காந்தி நூற்றுண்டுவிழா நிதிக்காக கொடித்தினம் ஆரம்பிக்கப் பட்டது. 1969, அக்டோபர் 2-ம் திகதி மகாத்மாவின் 100-வது பிறந்த தினத்தன்று நிகழ்ச்சிகள் பலவற்றை நடத்துவதற்கும் விரிவான திட்டம் உருவாக்கப்பட்டுள் ளது. சமய நிகழ்ச்சிகள், கலாசார நிகழ்ச்சிகள் சொற் பொழிவுகள் அன்றைய தினம் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு ள்ளன. சுகததாஸ விளையா ட்டரங்கில் திருமதி பண் டாரநாயக்கா இந்தியப் பிரமுகர் திருமதி விஜயலட் சுமி பண்டிற், பிரதம மந்திரி திரு. டட்லி சேனநா யக்கா போன்றவர்கள் சொற்பொழி வாற்றுவார் கள்.

இந்தத் திட்டம் சிறப் பாக செய்யப்படுவதற்கு காந்தி நூற்றுண்டு விழா கமிட்டியுடன் இலங்கையி லுள்ள இந்திய தூதரகம் ஒத்துழைத்து வருகின்றது. இலங்கை முழுவதும் மக்கள் வாசித்துப் பயன் பெறுவ தற்காக முக்கியமான 50 நூலகங்களுக்கு மகாத்மா பற்றிய 1500 நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட்டுள் ளன. இலங்கை முழுவதும் கண்காட்சிகளை நடத்தும் வகையில் சிரமதான இயக் கத்துக்கு மகாத்மா பற்றி புகைப்பட தொகுதிகள் அன்பளிப்பு செய்யப்பட்டுள் ளன. மகாத்மா காந்தி நூற்றுண்டு விழா கமிட்டி தலைவரிடமும் இம்மாதிரி யான படத் தொகுதியொ ன்று கொடுக்கப்பட்டிருக்கி றது.

மகாத்மா காந்தி பற்றிய கட்டுரைகள் பலவும் பத்தி ரிகை சஞ்சிகைகளில் வெளி யிடுவதற்காக கொடுக்கப் பட்டுள்ளன.

இந்திய தகவல்பகுதியி னர் மகாத்மா காந்தி பற் றிய சினிமா படச் சுருள்க ளையும் கடனுகக் கொடுத்து தவ முன்வந்திருக்கிருர்கள்.

பெற்ருேலியம் கூட்டுத்தாபன டைக்ரடர்கூறுகிருர்

# விரைவில் வேலை நீக்க நோட்டீஸ் வழங்கப்படும்

கோட்டை, செவ்.

அடுத்த சில நாட்களில் ஊழியர் வேலைக்குத் திரு ம்பா விட்டால், வேலைநீக்க அறிவித்தல் அனுப்பப் பட்டு, புதிய ஆட்கள் வேலையில் சேர்த்துக் கொள் ளப்படுவார்கள் என்று பெற்ருேலியம் கூட்டுத் தாபன டைரக்டர் திரு. லயனல் குணதிலகா தெரி விக்தார்.

ஊழியர் பலர் வேலைக்குத் திரும்பி விட்டதாகவும் அவர் கூறினுர். விரைவில் வேலைக்கு வராத ஊழிய ருக்கு வேலை நீக்க அறிவித் தல் அனுப்பப்பட விருப்ப தாகவும் டைரக்டர் சொன் ஞர்.

பெற்ருேலியம் கூட்டுத் தாபனத் தலைவர் திரு. கே. ஆழ்வாப்பிள்ளை வேலை நிறுத் தம் சம்பந்தமாக அறிக்கை யொன்றைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவிடம் சமர்ப்பிப்பார் என எதிர் பார்க்கப்படுகிறது.

பெற்ருேலியம் கூட்டுத் தாபனத்தைச் சேர்ந்த கூட் டுத் தொழிற்சங்கம் விடுத் துள்ள அறிக்கையில் "1968 நவம்பரில் 15 கோரிக்கை களை சமர்ப்பித்தோம். சபை இந்தக் கோரிக்கை களை நிராகரித்தது. 1968 டிசம்பர் 8-ம் திகதி தேசிய சேவை அமைச்சருடன், கூட்டுத்தாபன தலைவர் மனேஜர் முன்னிலையில் ஒரு மகாநாடு நடைபெற்றது. அந்த மகாநாட்டில் சில கோரிக்கைகளைத் தருவ தற்கு அமைச்சர் இணக்கம் தெரிவித்தார். ஆனுல் சபை இவைகளில் ஒரு கோரிக்கையாவது நிறை வேற்றவில்லை கடந்த ஒன் பது மாதகாலமாக சபையி டமும், அமைச்சரிடமும் இது பற்றி வற்புறுத்தி னேம் ஆனுல் பலனில்லை.

## பொங்கல் விழா

அல்லைப்பிட்டி, செவ்.

பிரசித்திபெற்ற நயினுதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல்விழா மிகவும் சிறப்பாக நடை பெற்றது. இவ்விழாவில் தீவுப்பகுதியிலிருந்தும், வட மாகாணத்தின் பல பகுதிக ளிலுமிருந்தும் அனேகம் பேர் கலந்துகொண்டனர்.

ஊர்காவற்றுறை, திங்கள்

சாட்டிமாதா கோவில் வருடாந்த உற்சவம் நேற்று கொடியேற்ற வைபவத்து டன் ஆரம்பமாகியது இம் மாதம் 24-ம் திகதி திரு விழா முடிவடையும்.

## 47,000 ஆசிரியர்கள் பதவி உயர்வு கோருகின்றனர்

கோட்டை, செவ்வாய்

47,000 ஆசிரியர்கள் கல்வியமைச்சிடம் பதவி யுயர்வு கோரியுள்ளார்கள்.

பலவருடங்களாகத் தங்க ளுக்குப் பதவியுயர்வு வழங் கப்படவில்லை யென்பதைச் சுட்டிக்காட்டி இவ்வாசிரி யர்கள் தங்கள்பிரதிநிதிகளை கல்வியமைச்சரிடம்அனுப்பி யும் எழுத்து மூலமும் கோரி யுள்ளனர்.

தாங்கள்சேவையைத்திறம் படச் செய்வதற்கு பதவியுய ர்வு தேவையென்பதை இவ் வாசிரியர்கள் சுட்டிக்காட்டி யுள்ளார்கள். உதவி ஆசிரி யர்கள், அதிபர்கள், உப அதி பர்கள் ஆகிய பதவிகளுக்கு பதவியுயர்வு பெற அநேக ஆசிரியர்கள் காத்திருக்கி ருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனசமூக நிலைய சாம்பியன் கோஷ்டிகளின்

# உதைபந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், புதன் விளையாட்டமைச்சின் ஆதரவுடன், யாழ். மாவட்ட சனசமூக நிலைய சாம்பியன் கோஷ்டிகளிடையே யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

## றெக்கிளமேசன் வெற்றி

யாழ்ப்பாணம் 'றெக்கிளமேசன் சனசமூக நிலைய உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் - கோப்பாய் காரியாதிகாரி தெரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் றெக்கிளமேசன் கோஷ்டி 2—1 கோல்களால் வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு திரு ஞானப்பிரகாசம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## சமமான முடிவு

குருநகர் சனசமூக நிலைய உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் - உடுப்பிட்டி காரியாதிகாரி தெரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற ரசிப்பான போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

இவ் ஆட்டம் தொடங்கி 5 நிமிடங்களுக்கிடையில் உடுப்பிட்டிக் கோஷ்டி முதலாவது கோலை மிக வேகமாகப் போட்டது. இடைவேளையின் பின் குருநகர் சனசமூக நிலைய கோஷ்டியின் முன்னணி வீரர் நவாப்ராசா அழகாக ஒரு கோலைப் போட்டார். ஆட்டம் முடிவடையும் வரை இரு கோஷ்டிகளும் தலா 1—1 கோலைப் பெற்றமையால் ஆட்டம் சரிசமனாக முடிவுற்றது இப்போட்டிக்கு திரு. ராஜேந்திரா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர். (தே. நி)

# விளையாட்டுக் கழக நிர்வாகிகள்

உடுப்பிட்டி, செவ்

வதிரி தேவரையாளி பிளாஸ் விளையாட்டுக் கழக வருடாந்தக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு ஆ. தம்பையா. தலைவர்: திரு வ, கந்தசாமி, உபதலைவர்: திரு ந. பேரானந்தம், செயசன், உபசெயலாளர்: திரு ந. சுகுமாரன், தனாதிகாரி: திரு ந. வேலழகன், விளையாட்டுப் பகுதிப்

# 'துணை வேந்தர் நியமனத்தில் வகுப்புவாதம்''

அளவெட்டி, செவ்வாய்

''கொழும்பு சர்வகலாசாலைத் துணை வேந்தர் பதவி உண்மையில் பேராசிரியர் திரு. ஏ. டபிள்யு. மயில்வாகனத்துக்கே உரியதாகும். அவரிடம் நேர்மை, ஆற்றல், அனுபவம், தகுதி இருக்கின்றன. இவையெல்லாவற்றையும் தேசிய உயர் கல்விச் சபையும், கல்வி அமைச்சரும், பிரதம அமைச்சரும் புறக்கணித்து விட்டனர். உண்மையில் இந்நாட்டில் இனவாதம் தாண்டவமாடுகிறது.''

ஈழத் தமிழ்நாடு இளந் தமிழர் விடுதலை இயக்கப் பொதுச் செயலாளர் திரு கே. வி. ஜெயரட்ணசிங்கம் கொழும்பு சர்வகலாசாலைத் துணை வேந்தர் நியமனம் சம்பந்தமாக மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

## புதன் 17—9—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ அன்ட் 61 மீ**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7 30 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன்ட் 49 மீ**

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 திரைகானம், 1-00 மாணவர் மன்றம், 1-30 செய்திச்சுருக்கம்

**344 மீ அன்ட் 61 மீ**

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 ஓடிவிளையாடுபாப்பா, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 கிராம சஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7 03 வயலின், 7-35 வானொலி குறுக்கெழுத்துப்போட்டி, ... கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

# 'எந்த ஆட்சியிலும் தமிழருக்கு விமோசனம் கிடையாது

## போராடியே பெறவேண்டும்'

— தீவுப்பகுதி எம். பி.

அல்லைப்பிட்டி, செவ்

''தேசிய அரசாங்கம் என்று சொல்லப்படும் இன்றைய அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எத்தனையோ நன்மையான விஷயங்களில் தலையிட்டு அவமானத்தை உண்டுபண்ணிவிட்டது. இந்த அரசாங்கம் தம்மை தேசிய அரசாங்கம் என்று கூறிக்கொள்கின்றது. ஆனால் இதில் தேசியமுமில்லை, ஜனநாயகமும் இல்லை, அது தனது வகுப்புவாதத்தனத்தையே காட்டி வருகின்றது. டட்லி அரசாங்கத்திலும் சரி ஸ்ரீமாவோவின் அரசாங்கத்திலும் சரி தமிழ்மக்களுக்கு என்றும் விமோசனம் கிடைக்கமாட்டாது. இதற்கு மக்கள் துணிச்சலுடன் போராடி எமது இழந்த உரிமைகளைப் பெறவேண்டும்''.

மேற்கண்டவாறு மண்டைதீவில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் ஊர் ாவற்றுறை எம் பியும் தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவருமாகிய திரு வ. நவரத்தினம்குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், இன்றைய அரசாங்கத்தின் மூலம் தமிழ்மக்கள் எந்தவிதமான நன்மையையும் அடையவில்லை. தமிழ்ப் பிரதேசம் பின்தங்கியநிலையில் உள்ளது. பதிலாக தென்னிலங்கை முன்னேறிக் கொண்டு போகின்றது. இதை தமிழ்க்காங்கிரஸ் இன்னும் உணரவில்லை. கொழும்பு பல்கலைக்கழக துணைவேந்தர் நியமனத்தில் அரசாங்கம் தமிழ்மக்களுக்குச் செய்த நீக்கமுடியாத அவமானத்தின் பின்பும் தமிழ்க்காங்கிரஸ் அரசாங்கத்துடன் ஒட்டி உறவாடிக் கொண்டிருப்பது கூடாது. அது தனது சுயகௌரவத்தைக் காப்பாற்றவேண்டுமானால் அரசாங்கத்திலிருந்து உடனடியாக வெளியேற வேண்டும் இன்றேல் தமிழ் மக்களுக்குச்செய்யும் மகா பாதகமான செயலாக முடியும்.

இக்கூட்டத்திற்கு திரு. ரி. பேரின்பநாயகம் தலைமை வகித்தார். மற்றும் பலரும் பேசினர்.

# குற்றப் நிரூபிக்கப்பட்டது

வல்வெட்டித்துறை, செவ்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த எஸ். ஜெயராமசந்திரலிங்கம் கடந்த ஜன ... வெட்டித்துறைப் பொலிஸாரிடமிருந்து கள்ளக் கடத்தல் சேலைப் பார்சல் ஒன்றைப் பறித்து எடுத்துச்

# செய்திச் சுருக்கம்

திருக்கோணமலை, செவ்.

திருக்கோணமலைமாவட்ட பட்டினசபை, கிராமசபைத் தலைவர்களின் மாநாடு இம்மாதம் 19-ம் திகதி திருகோணமலை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவிருக்கிறது.

## சத்தியாக்கிரகம்

வவனிக்குளம், செவ்வாய்

வவனிக்குளம் இரண்டாம் யூனிட் பகுதியை மன்னார் அரசாங்க அதிபரின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருமாறு கோருவதற்காக இம்மாதம் 21-ம்திகதி இப் குதி மக்கள் சத்தியாக்கிரகம் ஒன்றைச் செய்யத்தீர்மானித்துள்ளனர். மன்னார் கச்சேரிக்குமுன் இது நடைபெறும்,

சத்தியாக்கிரகம் செய்வது பற்றி சம்பந்தப்பட்ட சகல உயர்தர அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொழிலாளர் வேலைநிறுத்தம்

பூண்டுலோயா, செவ்.

பூண்டுலோயா டன்சினன் தோட்டத்தைச் சேர்ந்த சுமார் 500 தொழிலாளர்கள் திடீர் வேலைநிறுத்தத்தில் குதித்தனர். இ. தொ. கா. அங்கத்தவர்களான இவர்கள், ஒரு கணக்கப்பிள்ளை வேலைநீக்கஞ் செய்யப்பட்டதைத் தொடர்ந்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

## திமில தீவு மக்கள் அவதி

மட்டக்களப்பு, செவ்.

... டுநகர் திமிலதீவுக்கு ப...சேவை வசதி செய்து கொடுக்கும்படி இப்பகுதி மக்கள் மட்டக்களப்பு இ. போ. ச. வைக் கேட்டுக் கொண்டுள்ளனர். திமில தீவுக்கு பஸ்சேவை இல்லாதி...பதால் இப்பகுதியை

# "பென்ஷன் வழங்குக"

கேகாலை, செவ்வாய்

'30 வருடங்களுக்கு மேலாகத் தொடர்ந்து சேவையாற்றிய வயது சென்ற ஆயுள் வேத டாக்டர்களுக்கு அரசாங்கம் ஒரு 'பென்சன் முறையை ஒழுங்கு செய்ய வேண்டும்'

கேகாலை மாவட்ட ஆயுள் வேத வைத்திய சங்க 20-வது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் மேற்படி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கூட்டுறவு வைத்தியசாலையொன்றை ஆரம்பிப்பதற்கு சௌக்கிய அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியிடம் கேகாலை பழைய வைத்தியசாலையின் ஒருபகுதியைத் தருமாறு கோருவதாகவும் இச்சங்கம் தீர்மானித்துள்ளது.

# விவசாயிகள் கஷ்டம்

உருத்திரபுரம், செவ்வாய்

உருத்திரபுரத்தில் மழை இல்லாத காரணத்தால் விவசாயிகள் பெரிதும் கஷ்டமடைகின்றனர் காலபோகம் சிறுபோகம் இல்லாததால் மக்களின் நாட்டம் விவசாயத்தில் குறைந்துள்ளது. இன்றைய நிலையில் கிணறுகளிலும் தண்ணீர் இல்லையென்பது குறிப்பிடத்தக்கது தண்ணீர் விநியோகம் சம்பந்தமாக சமூக சேவைப் பகுதியினரால் வழங்கப்பட்டு வரும் தண்ணீர் பொதுமக்களுக்கு குடிக்கவும் மற்ற தேவைகளுக்கும் பாதாமலிருக்கிறது. அரிசியின் விலையும், நெல்லின் விலையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது

# உபதபால் நிலைய திறப்பு விழா

வல்வெட்டித்துறை, புதன்

வல்வெட்டி புதிய உபதபால் நிலையத்தை இன்று காலை உடுப்பிட்டி எம். பியும், உப சபாநாயகருமான திரு. எம். சிவசிதம்பரம் திறந்துவைப்பார், யாழ். மாவட்ட தபால் சுப்பிரிண்டன் திரு. தர்மலிங்கமும் கலந்துகொள்வார். திரு நா. பாக்கியலிங்கம் ...ிய உபதபாலதிபராகப் பொறுப்பேற்பார்.

# ...லிப முன்னணி கூட்டங்கள்


## தேவை

அனுபவமுள்ள கணக்கு லிகிதர் 1-10-69 தொடக்கம் தேவை. அனுபவத்திற்கும், தரத்திற்கும் தக்கதாகச் சம்பளம் கொடுக்கப்படும். 25ந் திகதிக்கு முன் மனுக்கள் அனுமதிக்கப்படும். கௌரவ காரியதரிசி, Y.M.C.A., யாழ்ப்பாணம். 1407

லைசென்ஸ் உள்ள இரட்டைக் குழல் துப்பாக்கி தேவை. எனது விலாசத்தில் தொடர்புகொள்ளவும் மு இராசதுரை, கலைவாணி வீதி, தையிட்டி, காங்கேசன்துறை. 1409

யாழ்ப்பாணத்தில் 60-ம் ஆண்டு தொடக்கம் இயங்கி வரும் என்ஜினியரிங் கோப்பறேற்றிற்கு ஆங்கில பாடத்துடன் G. C. E. தராதரம் உடைய தட்டெழுத்து தெரிந்த பிணைப்பணத்துடன் 35 வயதிற்குட்பட்ட மனேச்சர் ஒருவரும் நல்ல வரும்படி வரக்கூடிய தொழிற்சாலை ஒன்றிற்கு ரூபா 5000/-க்கு மேற்பட்ட பங்கு போட்டு அத்தொழிலை மேற்பார்வை செய்யக்கூடிய 45 வயதுக்கு உட்பட்ட ஒருவரும் தேவை. 25-ந் திகதிக்குமுன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் 1400, மே/பா 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 1400

## WANTED

Graduates or Graduands to teach, Physics, Chemistry, Biology, Pure, Applied & Advance Maths Evening Classes-Tamil medium Apply C. C. Raja, Uduvil, Chunnakam. 1406

## விற்பனைக்கு

காணி:

25 பரப்புக் காணி டச்றோட்டில் முழுமையாகவோ அன்றி பிரித்தோ சகல வசதிகளுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். M. S. வேலுப்பிள்ளை, ஆரியகுளம், யாழ்ப்பாணம் அல்லது திருமதி சண்முகம், கந்தையாபிள்ளை வீதி, உடுவில். 1402

## அறிவித்தல்

உங்கள் மின் மோட்டார்கள் மற்றும் மின்கருவிகள் செயல்படத் தயங்குகின்றனவா? குறுகிய நேரத்தில் சிறந்த முறையில் சீர்ப்படுத்த

ஈஸ்வரி எலெற்றிக்கல்ஸ், 136, மானிப்பாய்வீதி, யாழ்ப்பாணம். (ஐந்துசந்திக்கருகாமை)

## விற்பனைக்கு

காணி:

கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவிலுக்கு முன் ஒழுங்கையில் கொழும்பார் வீட்டுக்குப் பக்கத்தில் 6 பரப்பு தென்னை வளவுக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். ஏபா. தம்பித்துரை, கோண்டாவில் கிழக்கு. 1405

## வரி விளம்பரம்

### தேவை

மெசின் மைன்டர்

அனுபவம் நிறைந்த ஹைடில்பேர்க்மெசின்மைன்டர் யாழ்ப்பாணத்தில் அச்சகத்திற்குத் தேவை. நற்சாட்சிப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1408, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1408


# மரண அறிவித்தல்

## கனகசுந்தரம் இராமச்சந்திரன்

வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவரும், யாழ்ப்பாணம் தபால்நிலையச் சிரேஷ்ட அத்தியட்சருமாகிய திரு. கனகசுந்தரம் இராமச்சந்திரன் காலமாகிவிட்டார். இவர் வள்ளிநாயகியின் அருமைக் கணவரும், ஸ்ரீகுமார், சுந்தரகுமார், செல்வக்குமார், ஜெயகுமார், உதயகுமார், லலிதா, வனிதா, அமிர்தா ஆகியோரினது தந்தையும், பாலகிருஷ்ணருடைய மாமனாரும், மலேசியாவிலுள்ள வடிவேலாம்பிகையினதும், தில்லைநாயகி, செல்வநாயகி, சிவகாமசுந்தரி, சகுந்தலாதேவி, நடேசன், முருகமூர்த்தி, இந்தியாவில் கல்வி பயிலும் மயிலேறும்பெருமாள் ஆகியோரினது சகோதரரும், பஞ்சலிங்கம், அழகானந்தசுந்தரம், வரதராஜா, மலேசியாவிலுள்ள பாலசுப்பிரமணியம் ஆகியோரினது மைத்துனருமாவர். அன்னாரினது ஈமச்சடங்கு 17ந் திகதி மாலை 3 மணிக்கு சாவகச்சேரியில் நடைபெறும்.


தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. — பா. பாலகிருஷ்ணர் 1756


75வது தினம்

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ், தங்கவேலு, பத்மினி, பேபி ராணி நடித்த

விஜயா: சுரேஷ் கம்பைன்ஸ்



குழந்தைக்காக

கதை-வசனம்: துறையூர் மூர்த்தி பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

குழந்தைக்காக நீங்கள் வாங்கும் அரை டிக்கட்டுகளை கவனமாக வைத்திருங்கள். பலபரிசுகள் காத்திருக்கின்றன உங்கள் குழந்தைக்காக!

யாழ் - வின்ஸர்

தினசரி — 4 காட்சிகள்

★ எம். ஜி. ஆர். - ★ ஜெயலலிதா

நம்பியார், நாகேஷ், ஷீலாதேவி, அசோகன் நடிக்கும்

புதியபூமி

ராணி (யாழ்ப்பாணம்)

சிவாஜி ஜெயலலிதா

சௌகார் ஜானகி


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பையா, தலைவர்: திரு வ, சுந்தசாமி, உபதலைவர்: திரு ந. பேரானந்தம், செயலாளர்: திரு ந. சுகுமாரன், தனாதிகாரி: திரு ந. வேலழகன், விளையாட்டுப் பகுதி பொறுப்பாளர்: திரு க. சிங்காரசன்.

ஐந்து பேரடங்கிய நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## ஆடு திருடினராம்

வல்வெட்டித்துறை, செவ். கரணவாய் வடக்கைச் சேர்ந்த க. சரவணமுத்து என்பவர் அதே இடத்தைச் சேர்ந்த க. சின்னத்தங்கத்தின் ரூபா 120 பெறுமதியான ஆட்டைக் களவாடி பருத்தித்துறையில் விற்க முற்படுகையில் பொலிஸ் உத்தியோகஸ்தரான திரு. க. கந்தையாவால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. வின்ராசா முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்ட போது மாஜிஸ்திரேட் எதிரியைரூபா 100பிணையில் செல்லும்படியும் மீண்டும் இம்மாதம் 29-ந் திகதி கோட்டில் ஆஜராகும் படியும் உத்தரவிட்டுள்ளார்.

7-00 செய்திச்சுருக்கம், 7-03 வயலின், 7-35 வானொலி குறுக்கெழுத்துப்போட்டி, கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

## ப நோ கூ ச நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், புதன் வண்ணார்பண்ணை நாவலர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 4-வது வருடாந்த பொதுக் கூட்டம் நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. திரு. சி. பரம்தில்லைராஜா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் இவ்வருடத்தில் கிடைக்கப்பெற்ற நயம் பற்றி காரியதரிசி விளக்கினார். கூட்டுறவுப் பரிசோதகர் திரு. எஸ். இராமேஸ்வரம் சங்கத்தின் வளர்ச்சிப் பற்றி பேசினர்.

பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: சி. பரம்தில்லைராஜ, உப தலைவர். வி. ஏரம்பமூர்த்தி, செயலாளர்: வ. கந்தசாமி, உபசெயலாளர்: திரு. சு, செல்வராசா உபகுழு: ஆர் வி சுப்பையா செட்டியரர், செ சின்னத்துரை, முக இரத்தினவேலுப்பிள்ளை.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த எஸ். ஜெயராம சந்திரலிங்கம் கடந்த ஜன ... வெட்டித்துறைப் பொலிஸாரிடமிருந்து கள்ளக் கடத்தல் சேலைப் பார்சல் ஒன்றைப் பறித்து எடுத்துச் சென்றதாக வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறைக் கோர்ட்டில் விசாரிக்க பட்டது.

விசாரணையின் பின்னர் எதிரியைக் குற்றவாளியாகக்கண்ட மாஜிஸ்திரேட் இம்மாதம் 22ந் தேதிவரை அவரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டுத் தீர்ப்புக் கூறுவதை ஒத்திவைத்தார்.

## புதிய நிர்வாகிகள்

பச்சிலைப்பள்ளி, செவ்வாய் மருதங்கேணி வத்திராயன் பல நோக்கக் கூட்டுறவுச் சங்கப் பொதுக்கூட்டம் கூட்டுறவு வட்டாரப் பரிசோதகர் கே. செல்வராசா தலைமையில் நடைபெற்ற போது தெரிவுசெய்யப்பட்ட நிர்வாகிகள் விபரம் வருமாறு:-

தலைவர்: நா. பழனியர், உப தலைவர்: சோ. வைரமுத்து, காரியதரிசி: மயில்வாகனம், தனாதிகாரி: த. பாலசுந்தரம் ஆறு பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப் பட்டது.

ப[...] சேவை வசதி செய்து கொடுக்கும்படி இப்பகுதி மக்கள் மட்டக்களப்பு இ. போ. ச, வைக் கேட்டுக் கொண்டுள்ளனர். திமில தீவுக்கு பஸ்சேவை இல்லாதி[...]பதால் இப்பகுதியை அடுத்த பல கிராம மக்கள் அவதியுறுகின்றனர்.

பண்டத்தரிப்பு ப.ச.

## பொது மக்களுக்கு வேண்டுகோள்!

சுழிபுரம், செவ்வாய் பண்டத்தரிப்புப் பட்டின சபைக்குச் சேரவேண்டிய சோலைவரிப்பணத்தை விரைவில் செலுத்தி வட்டார அபிவிருத்தி வேலைகளுக்கு உதவுமாறு சபைத்தலைவர் திரு இ. செல்வரத்தினம் வரியிறுப்பாளரைக் கேட்டுக் கொண்டுள்ளார். அவ்வவ் வட்டாரங்களில் அறவிடப்படும்வரி நிலுவைப்பணம் அந்தந்த வட்டார அபிவிருத்திகளுக்கே கசயவு செய்யப் படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உபதபாலதிபராகப் பொறுப்பேற்பார்.

## வாலிப முன்னணி கூட்டங்கள்

யாழ்ப்பாணம். புதன் தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணிப்பொதுக்கூட்டம் இம்மாதம் 24-ம் திகதிசங்கு வேலியிலும், 25-ம் திகதி கைதடியிலும் நடைபெறவிருக்கிறது.

## போலியோ தடைமருந்து விநியோகம்

பண்டத்தரிப்பு, செவ். பண்டத்தரிப்பு சுகாதார பரிசோதகர் பிரிவில் இம் மாதம் 19-ம்திகதி தொடக்கம் அடுத்தமாதம்2-ம்திகதி வரை பண்டத்தரிப்பு, சில்லாலை, மாதகல், இளவாலை ஆகிய பகுதிகளில் சிறுவர்களுக்கு இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்து விநியோகிக்கப்படவிருக்கிறது.

# பெண் விடுதலைக்காக மகாத்மா ஆற்றிய தொண்டு

## சோவியத் மாதர்கள் பாராட்டு

மாஸ்கோ, செப். 17

சோவியத் மாதர் சங்க அலுவலகத்தில், மகாத்மா காந்தியின் நூற்றாண்டு விழாவைமுன்னிட்டு, சோவியத், இந்திய மாதர்களின் கூட்டமொன்று அண்மையில் நடைபெற்றது. சோவியத் யூனியனில் இந்தியத் தூதுவரின் மனைவி திருமதி தார், சர்வதேச குழந்தை நலச் சங்கத்தின் துணைத் தலைவர் தாரா அலிபெயிக் ஆகியோரையும், மாஸ்கோவில் இந்தியத் தூதரகத்தில் பணியாற்றும் அதிகாரிகளின் மனைவியர்களையும் சோவியத் மாதர்கள் வரவேற்றனர்.

சோவியத் மாதர் குழுவின் தலைவரும் சோவியத்-இந்திய கலாசார உறவுக் கழகத்தின்செயற்குழு உறுப்பினருமான விதியாபெத்ரோவா கூட்டத்தைத் துவக்கி வைத்தார். ஆசிய மக்கள் கழகத்தின் அனுபவம் மிக்க ஆராய்ச்சியாளர் தமாரா தெவ்யாத்கிணு அரிய உரை நிகழ்த்தினர் அவர் காந்தியின் மாபெரும் மரபைப் பற்றியும், அவரது பணிகளைப் பற்றியும் எடுத்து உரைத்தார்

''மகாத்மா காந்தி தனது தத்துவ ஆராய்ச்சியில் பெரும்பகுதியைப் பெண் விடுதலைக்காக ஒதுக்கியுள்ளார். பெண் சமத்துவத்தை முதன் முதலாக வலியுறுத்தியவர்களில் அவரும் ஒருவர். அவர் பழைய மரபுகளைச்சாடினார்; பெண்களைத் தாழ்ந்தவர்கள் என்றும், பலவீனமானவர்கள் என்றும் கருதுவதைக் கண்டித்தார். பெண் கல்விக்காகவும், பெண்களுக்கு வீட்டிலும் பொது வாழ்விலும் சமத்துவம் அளிக்கப்படவேண்டும்என்பதற்காகவும், அவர் போராடினார் இந்தியாவின் தேசவிடுதலை இயக்கத்தில் அவர் பெண்களுக்குஒரு முக்கியமான பாத்திரத்தை அளித்தார். காந்தியின் கருத்துக்கள் இந்தியாவில் மட்டுமின்றி இதர பல நாடுகளிலும் தமது முக்கியத்துவத்தை இழந்துவிடவில்லை.''

இவ்வாறு சோவியத் ஆராய்ச்சியாளர் தமாரா தெவ்யாத்கிணு கூறினார்.

கூட்டத்தின் அமைப்பாளர்களுக்கு திருமதி. தார் நன்றி நவின்றார் பெண் விடுதலைக்காக மகாத்மா காந்தி ஆற்றியுள்ள அருந்தொண்டை அவர் மிகவும் பாராட்டினார். 'சோவியத் பெண்களின் உதாரணத்தைப் பின்பற்றி, நாங்கள் முன்னேற்றப் பாதையில் மிக உறுதியுடன் நடைபோட விரும்புகிறோம்'' என்று கூறினார்.

குறுகிய நேரத்தில் சிறந்த முறையில் சீர்ப்படுத்த
ஈஸ்வரி எலெற்றிக்கல்ஸ்,
136, மானிப்பாய்வீதி,
யாழ்ப்பாணம்.
(ஐந்துசந்திக்கருகாமை)
1753

## தாக்கப்பட்டவர் ஆஸ்பத்திரியில்

மல்லாகம், செவ். பொல்லினால் பலத்த தாக்குதலுக்குள்ளாகிய வட்டுக்கோட்டை சங்கரத்தையைச் சேர்ந்த கே. திருநாவுக்கரசு என்றநபர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். இத் தாக்குதல் சம்பவம் குறித்து பொலிசாரால் தேடப்பட்ட சந்தேகநபர் அரியநாயகம் சங்கானைப்பொலிசில் சரணடைந்துள்ளார். பொலிசார் மேலும் விசாரணை செய்கின்றனர்.

## திருட்டு

சுழிபுரம், செவ் சுழிபுரம்- நெல்லியான் ரோட்டுக்கு அருகாமையிலுள்ள திரு சி நாகலிங்கம்என்பவரின் வீட்டில் நேற்று நள்ளிரவு வீட்டுக்கூரை ஒடு பிரித்து மிகவும் துணிகரமான முறையில் திருட்டு நடைபெற்றுள்ளது.

# இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 1-ந் திகதி (17-9-69)

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்-** எதிரிகள் விளிப்புடன் காத்திருப்பர். ஏக்கத்தின் சாயல் உண்டு. ஆத்திரத்தை அடக்கினால் அமைதிக்கு இடமுண்டு.

**ரிஷபம்-** பொன்னானவாழ்வு பெண்ணாலே கிட்டும். கண்ணியம் குடைவிரிக்கும். கடமையும் சிறக்கும்.

**மிதுனம்-** பிறரை நம்புதல் பெரிய ஆபத்துக்கு இடம் உண்டு வீண்செலவு வேண்டாம். விபரீதம் விளைந்து விடும்.

**கடகம்-** தந்தை வழி ஆதரவு தவறாமல் கிடைக்கும். தடைகள் எல்லாம் தவிடுபொடி. தனிக்கொடி பறக்கும்

**சிம்மம்-** வித்தையில் பலிதம் உண்டு. வேண்டியது கிடைக்கும். பொதுப்பணி புகழுடன் தனமும் சேரும்.

**கன்னி-** மக்களால் மனமகிழ்ச்சி, மனம்நிறைந்த வாழ்வு. புதுமையில் நாட்டம், புதுப்பொலிவும் உண்டு.

**துலாம்-** தானிய நட்டத்தால் கவலையும் சேரும். கல்வியில் மறதிஉண்டு. தனிவழியை நாடுவீர் அமைதியும் உண்டு.

**விருச்சிகம்-** குடும்பத்தில் பிழை, மனதிலே சுமை, அலைமோதும் வாழ்க்கை, தெய்வமே துணை.

**தனுசு-** சொற்சிலம்பம் ஆடுவதில் மற்றவரை சொற்கவைப்பீர். சொகுசான நாள். இன்று குஷியாய் இருப்பீர்.

**மகரம்-** கற்றதால் பயன் இன்று கட்டாயம் கிட்டும். அறிஞர்கள் போற்றுவர். இன்று ஆதரவும் பெருகும்.

**கும்பம்-** இதயத்தில் பூரிப்பு இன்பத்தின் சாயல், இல்லமும் சிறக்கும். இனிமையும் பிறக்கும். நல்ல காரியங்களுக்கு சிறந்தநாள்:

**மீனம்-** குருவின் ஆசியுடன் குறிக்கோளும் வெற்றி காணும். குன்றன நிமிர்ந்து நிற்பீர் குவிந்திடும் புகழும்.

## மேலும் புதிய கட்டிடங்கள்

அல்லைப்பிட்டி, செவ்வாய் இந்தோனேஷிய இளைஞர் இயக்கத்தினரால் காரைநகரில் பதினாறு லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டுள்ள மீன்பிடித் தொழிற்சாலைக்கு மேலும் பல லட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. வெகு விரைவில் இத்தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் டின் மீன்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவிருக்கின்றன. மேற்படி தொழிற்சாலையினால் நூற்றுக்கு மேற்பட்ட உள்ளூர் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் வேலைவாய்ப்பளிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது

## திறப்பு யாருடையது?

பலாலி வீதி கோண்டாவில் அருகாமையில் ஒரு திறப்பு கண்டெடுக்கப்பட்டு பி.வி பாலசுப்பிரமணியத்தால் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி6-30, இரவு10-00
பிரிபோயா, போயா 2-30மணி
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
வாழவைத்த தெய்வம்

வல்வெட்டித்துறை
ரஞ்சனா தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை 10-30
என். டி. ராமராவ்
நடித்த
அபூர்வபிறவிகள்

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7, & 9-45p.m
Poyadays 10-00 A,M.
Elvis Presley
in
CLAMBAKE

REGAL JAFFNA
Daily4-45, 7-00&9-45p.m
Poya, Pre poya 4 Shows
Eric Morecambe,
Ernie Wise
in
SPYLARKS
(Color)

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
சிவாஜி ஜெயலலிதா
சௌகார் ஜானகி
நடித்த
எங்க ஊர் ராஜா

அப்பல்லோ-11
12-9-69 தொடக்கம் அப்பல்லோ-11
டெக்னிக்கலரில் 15 நிமிடங்கள் காண்பிக்கப்படும்.
விண்வெளி வீரர்கள் பூமியிலிருந்து புறப்படுவதிலிருந்து சந்திரனில் கொடி நாட்டியதுவரை விபரமாகக் காண்பிக்கப்படும்.
Also Showing
APOLLO 11 in color-for 15 minutes,

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா வெலிங்டன் (யாழ்நகர்)
2-30 6-30 -930
திரைகளில்



ரங்கராவ் ★ அஞ்சலிதேவி
பாலையா ★ பேபி ரோஜாரமணி
மற்றும் பலர் நடித்த
ஏ. வி. எம். அளிக்கும்
பக்த பிரகலாதா
[ஈஸ்ட்மன் கலர்]

கெப்பிட்டல் (கொழும்பு) மைலன் (கொழும்பு) ராஜ் (நீர்கொழும்பு)
ஆகிய திரைகளில்
ரி. ஆர். ராமண்ணாவின் டைரக்ஷனில் உருவாகி
ரவிச்சந்திரன் ★ ராஜ்ஸ்ரீ
நாகேஷ்★ அசோகன்★ ஸ்ரீரஞ்சனி
வசந்தா ★ மனோகர்
நடித்த
ஐரிஸ் மூவிஸாரின்
நீயும் நானும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் மா-சே-துங்கும் அதிபர் நிக்ஸனும் நேரடியாக சந்திக்க வேண்டும்

## யு தாண்ட் வெளியிடும் யோசனை

நியுயோர்க், செப்டம்பர் 16

**அமெரிக்க அதிபர் திரு. நிக்ஸனும் கம்யூனிஸ்ட் சீனத் தலைவர் திரு. மா-சே-துங்கும் நேரடியாகச் சந்தித்து ஆலோசனைகள் நடத்தவேண்டுமென்று ஐ நா பாதுகாப்புச்சபையில் பிரதம காரியதரிசி யு தாண்ட் யோசனை கூறியிருக்கிறார்.**

ஐ நா. மகாசபையின் இந்தப் பருவத்திற்கான கூட்டம் ஆரம்பமாவதற்கு முதல்நாள் அவர் நிகழ்த்திய ஓர் உரையில் இந்த யோசனையைத் தெரிவித்தார்.

உலகநாடுகளுக்கிடையில் கருத்துவேற்றுமைகள் பெரிய சண்டைகளாக உருவெடுக்காமல் அமைதியைப் பராமரிக்கும் வகையில் பெரிய நாடுகள் மும்முரமாக நடவடிக்கைகளில் இறங்கவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திய யுதாண்ட் அமெரிக்க அதிபரும் சீனத்தலைவரும் சந்தித்துப் பேசுவதன் மூலம் இந்தவகையில் பெரும்பணியாற்ற முடியுமென்று குறிப்பிட்டார்.

அணு ஆயுதப் பெருக்கம் உலகில் மிகவும் கவலையளிக்கும் நிலையை அடைந்து வருவதாகக் குறிப்பிட்ட யுதாண்ட் ஆயுதக் குறைப்பு மகாநாட்டில் சீனாவையும், பிரான்சையும் கலந்துகொள்ளச்செய்யவேண்டும் என்றார்.

சோவியத் பிரதமர் திரு. கோஸிஜினும், சீனப் பிரதமர் சூ-என்-லா-யும் பீகிங்கில் சந்தித்துப் பேசியதை யு தாண்ட் வரவேற்பதாகக் கூறினர்.

மேற்காசியா பற்றி அவர் குறிப்பிடுகையில் அங்கு அமைதியை ஏற்படுத்துவதற்குப் பெரியநாடுகள் முழுமூச்சாக முயற்சியில் இறங்க வேண்டும் என்று வற்புறுத்தினர்.

## வியட்னுமிலிருந்து மேலும் அதிக யு. எஸ். துருப்புகள் விலகும்

நியுயோர்க், செப். 15

தென்வியட்னுமிலிருந்து மேற்கொண்டும் துருப்புகளை விலக்கிக் கொள்ள அமெரிக்கா தீர்மானித்திருப்பதாக முதலில் கிடைத்த செய்திகள் இப்பொழுது ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளன. ஆனல் எப்பொழுது இது நடைமுறையாக்கப்படும் என்பதும் எவ்வளவு பேர் விலக்கிக்கொள்ளப்படுவார்கள் என்பதும் தான் அறிவிக்கப்படவில்லை. அதிபர் நிக்ஸன் இன்று அல்லது நாளையதினம் மேலும் எவ்வளவு துருப்புக்கள் தென்வியட்னுமிலிருந்து விலக்கிக் கொள்ளப்படுவார்கள்என்று அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஏற்கனவே 25 ஆயிரம் அமெரிக்கத் துருப்புகள் தென்வியட்னுமிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். விலக்கிக் கொள்ளப்படும் அமெரிக்கத் துருப்புகளுக்குப் பதில் தென்வியட்னும் துருப்புகள் அமர்த்தப்படுவார்கள்.

தென்வியட்னுமிலிருந்து மேலும் 40 ஆயிரம் அமெரிக்கத் துருப்புகள் விலக்கிக் கொள்ளப்படுவார்கள் என்று தென்வியட்னும் துணை அதிபர் கா-ஒ-கி கூறியிருக்கிறார். ஆனல் இது அமெரிக்கத் தரப்பால் ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

## இஸ்ரேலின் உதாசீனப்போக்கு: பாதுகாப்புச்சபை கண்டனம்

நியுயோர்க், செப். 15

ஐ நா. பாதுகாப்புசபைத் தீர்மானங்களை இஸ்ரேல் உதாசீனம் செய்வதை பாதுகாப்புசபை வெகுவாகக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றது.

முஸ்லிம் நாடுகள் தாக்கல் [illegible]

... லாந்து, பராகுவே, கொலம்பியா ஆகிய நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

ஜெருசலத்தை இஸ்ரேல் தனது வசமாக்கிக்கொள்ள எடுத்துவரும் முயற்சிகளையும் பலநாடுகள் பாதுகாப்பு [illegible]

... இஸ்ரேல் உதாசீனம் செய்வதைக் கண்டிக்கும் அதே வேளையில் மேற்கொண்டும் முறையற்ற செயல்களைமேற்கொள்ளவேண்டாம் என்று பாதுகாப்புச்சபைத் தீர்மானம்இஸ்ரேலைவற்புறுத்தியது.

ஜெருசலத்தின் அந் [illegible]

## "கூட்டுறவு மயமாகிறது"

காலி, செவ்வாய்

"இன்று நாடு கூட்டுறவு மயமாக மாறிக்கொண்டு வருகிறது கூட்டுறவு ஆஸ்பத்திரியில் ஒருவன் பிறந்து, கூட்டுறவுப் பண்ணையில்பாலை அருந்தி, கூட்டுறவுப் பண்ணையில் வளர்ந்து, கூட்டுறவு கம்பனியில் வேலை செய்து, கூட்டுறவு சேவைகளில் ஈடுபட்டு கூட்டுறவு படமாளிகையில் பொழுதைப்போக்கி கடைசியில் கூட்டுறவு ஆஸ்பத்திரியில் மரணமாகக் கூடியநிலைக்கு நாடு முன்னேறிக்கொண்டு செல்கிறது. மரணக்கிரியைகளைக்கூட கூட்டுறவு மூலம் நடக்கக்கூடிய வசதி இப்போது கிடைத்துள்ளது."

காலி உதவி கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு எச். எம். அபயபால கூட்டுறவு சம்பந்தமான கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

## 'பொருளாதாரவளர்ச்சிபெற இளைஞர்கள் உழைக்க வேண்டும்'

உடுப்பிட்டி, செவ்வாய்

"ஒவ்வொரு நாடும் பொருளாதார, கலாச்சார வளர்ச்சி அடைய இளைஞர்கள்தான் உழைக்க வேண்டும். இளைஞர்களே எதிர்காலத்தை நிர்ணயிக்கும் சக்தியைப்பெற்றிருப்பதால் நாட்டுநலனில் அதிக அக்கறை கொள்ள வேண்டும். வாலிபர்கள் எவ்வித வேறுபாடுகளும் இன்றி ஒற்றுமையாகச் செயற்படுவதின் மூலம்தான் வேலையில்லாத் திண்டாட்டம் முதலிய பிரச்னைகளைத் தீர்க்கமுடியும்."

மேற்கண்டவாறு கரணவாய் தெற்கு சர்வோதய ஐக்கிய வாலிப சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் திரு கே. வல்லிபுரம் கூறினர். ஆசிரியர் திரு சு. குகராசன் பேசுகையில்,' படித்த இளைஞர்கள் உத்தியோகங்களை நம்பிஇருப்பதால் பயன் இல்லை. நாட்டுக்கு உண்மையில் சேவை செய்ய வேண்டுமென்ற ஆர்வமிருந்தால் விவசாயம், கைத்தொழில் துறைகளில் ஈடுபட்டு நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தலாம் விவசாயத்தில் அரசாங்க உத்தியோகத்தர்களும் நாட்டம் கொள்ள வேண்டும்," என்று கூறினர்.

பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத்தெரிவு செய்யப்பட்டனர்:

போஷகர்: திரு எஸ் கிருஷ்ணபிள்ளை, தலைவர்; திரு சுகுகதாஜன், உபதலைவர்: திரு எஸ் மாணிக்கம், காரியதரிசி; திரு ரீ தியாகராசா, உபகாரியதரிசி; திரு எஸ் தங்கராஜா தனதிகாரி: திரு ஆர் திருநாவுக்கரசு

ஏழுபேரடங்கிய நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## அரசுடைமைமட்டும் போதாது

### அவைதிறமாகச் செயற்பட வேண்டும்

### சர்வோதயத் தலைவர் வற்புறுத்து

பம்பாய், செப் 16

[illegible]தொழில்களை அரசுடைமையாக்கப்படுவது மட்டும் போதாது. அவை திறமையாகவும் செயற்பட வேண்டும் [illegible] களுக்கும் [illegible] மை ஏற்படுவதாக [illegible]

**தனியாரும் பின்பற்ற வேண்டும்**

ஜெயப்பிரகாஷ் நாராயண் மேலும் பேசுகையில், தனியார் துறையில்பல்வேறு தொழில்களுக்கும் நிறுவனங்களுக்கும் தொழில்திறன்களுக்கும் அதிபர் [illegible]

அதாவது அரசாங்கத்திடம் குவிவது அபாயமானது. அது சோஷலிசம் அல்ல. அதைச் சோஷலிசமாகவோ அல்லது [illegible] நான் கருதவில்லை. இந்த நிலைமையில்தான் அரசாங்கத்திடம் பொருளாதார [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "மகான்களின் வாழ்க்கைத்தத்துவங்கள் மக்களுக்கு புகட்டப்பட வேண்டும்"

உடுப்பிட்டி, செவ்.

"மனித சமூகத்திடையில் ஸ்ரீ இராமகிருஷ்ண பரஹம்சர், தூயஅன்னை ஸ்ரீ சாரதா தேவி, சுவாமி விவேகானந்தர் ஆகியோர் சமய வாழ்க்கை எப்படி அமையவேண்டும் என்று வாழ்க்கை மூலமாகவும், போதனைகள் மூலமாகவும் மிகவும் எளிதாகக் காட்டியுள்ளார்கள். காலவேகத்தில் மக்கள் எதுசரி, எதுபிழை என்று பகுத்தறியும் தன்மையையும் இழந்துவிடுகின்றனர். இந்தச் சந்தர்ப்பத்தில் மகான்களின் வாழ்க்கைத் தத்துவமும், உபநிஷதங்கள் ஸ்ரீமத்பகவத்கீதை விளக்கும் வாழ்க்கை முறையும் மக்களுக்குப் புகட்டப்படவேண்டியது இன்றியமையாததாகும்."

கல்கத்தா ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் சபைத் தலைவர் ஸ்ரீமத் வீரேஸ்வரானந்தாவிடம்துறவிப்பட்டம்பெற்ற பருத்தித்துறை ஸ்ரீ சாரதா நிலைய சேவாச்சிரமப் பொது செயலாளர் திரு இரத்தின சபாபதி பருத்தித்துறையில் நிகழ்த்தியசொற்பொழிவின் போதுமேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

ஸ்ரீ இராமகிருஷ்ண பரஹம்சர் 1886-வது ஆண்டில் மதுராநாதருடன் காசிக்கும் பிருந்தாவனத்துக்கும் யாத்திரைசெய்யநேரிட்டது. வழியில் அவர்கள் வைத்திய நாதம் என்னும் ஸ்தலத்தில் தங்கியிருந்தபோது அங்கு ஏழை ஜனங்கள் பசிப்பிணிவாய்ப்பட்டிருந்ததையும், உடுக்கத்துணி இல்லாது அவதிப்பட்டதையும் பார்த்த பரஹம்சர் பரிதாபப்பட்டார். அவர் மதுராநாதரிடம், 'ஜகன்மாதா உம்மிடம் நிரம்பப்பணம் கொடுத்து வைத்திருக்கிறளே. ஆதலால் இந்த ஏழை மக்களுக்குத் திருப்தியாக ஒருவிருந்து படைத்துத் தலைக்கு ஒரு துணியும் தாரும்' என்றார்.

'அவ்வளவுபணம்கொண்டு வரவில்லை. என்னசெய்வது' என்று மதுராநாதர் தயங்கினர். 'போம், எனக்குக் காசியாத்திரை வேண்டாம், இந்த ஏழை மக்களோடு இருந்தாற்போதும்', என்று சொல்லிக்கொண்டு ஸ்ரீ இராமகிருஷ்ண பரஹம்சர் ஏழைகளுடன்போய் அமர்ந்துகொண்டார். அவரது ஜீவகாருண்யத்தைப் பார்த்த மதுராநாதர் வேண்டிய பணமும், மூட்டை மூட்டையாகத் துணியும் கல்கத்தாவிற்குத் தந்தியடித்து வரவழைத்து அவரது விருப்பத்தை நிறைவேற்றினர். பின்னரே அவர்கள் புறப்பட்டுக் காசிபோய்ச் சேர்ந்தார்கள்.

ஸ்ரீஇராமகிருஷ்ணபரஹம்சர் தன்னுடைய இலட்சிய வாழ்க்கையை ஜீவனுடைய சேவைக்கு அர்ப்பணித்தார். ஒவ்வொரு ஜீவனும் நாராயணருடைய அம்சம் ஜீவனுக்குச் செய்யப்படும் சேவை அனைத்தும் சிவனுக்குச்செய்யப்படும் பூஜைக்குச் சமமாகும். ஆகையினல் வெறும் வெளிச்சடங்குகளினல்மனம் பண்பு அடையமாட்டாது உள்ளமும், உடலும் இணைந்து அல்லல் உறுவோருக்குப் பணிபுரிதலே நாம் இறைவனுக்குச் செய்யும் சிறந்த பூஜையாகும். இக்கோட்பாட்டையே தூயஅன்னை ஸ்ரீ சாரதாதேவியும், சுவாமி விவேகானந்தரும் அடிக்கடி சீடர்களுக்கு விளக்கிஉள்ளார்கள். இந்த அடிப்படையில் தான் ஸ்ரீசாரதா நிலைய சேவாச்சிரமமும் இயங்க எண்ணியுள்ளது.

ஆதரவற்றவர்களுக்கும், அல்லல் படுவோருக்கும் என்ன முறையில் பணிபுரிய முடியுமோ, அவ்விதத்தில் பணிபுரியநாம் கடமைப்பட்டுள்ளோம்.

வடமராட்சிபகுதி ஏழைப் பிள்ளைகளின் அனுதரவான நிலையைப்போக்கி அவர்களின் துயரக்கண்ணீர்துடைக்கவே ஸ்ரீசாரதா நிலைய சேவாச்சிரமம் ஒரு இலட்சம் ரூபா செலவில் அனுதைப்பிள்ளைகள் ஆச்சிரமம் நிறுவும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இப்பணியில் ஜீவகாருண்யமுள்ள ஒவ்வொருவரும் உதவவேண்டும் இது ஒருபொதுப்பணி ஜீவசேவை மகத்தானது.

## செவ்வாயில் மனிதன் இறங்கும் திட்டம்

நியுயோர்க், செப் 17

1980-ம் ஆண்டுக்கு முன்னர் செவ்வாய்க் கிரகத்தில் மனிதனை இறக்கும் திட்டத்தை அமெரிக்க அதிபர் நிக்ஸன் ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

இறுதித் திகதி பற்றி இனிமேல்தான் தீர்மானிக்கப்படும்.

சந்திரனிலிருந்து கொண்டு வரப்பட்ட கற்பாறைத் துண்டுகளை ஆராய்ந்து விஞ்ஞானிகள் அவை பூமியிலுள்ள கற்பாறைகளுக்கும் முந்தியவை என்று அறிவித்துள்ளனர்.

## மனைவியை வெட்டியதை கணவன் ஒப்புக்கொண்டார்

வல்வெட்டித்துறை, செவ்.

நாகர்கோவிலைச் சேர்ந்த எஸ். கந்தையா என்பவர் தமது மனைவி பராசக்தியைக் கத்தியால் வெட்டிப் படுகாயம் விளைவித்ததாக பருத்தித்துறைப் பொலிசாரால் [illegible] பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலை [illegible]

## 'பஸ் மோதியதும்; மயக்கமானேன்"

வல்வெட்டித்துறை, செவ்.

"நான்செலுத்திச் சென்ற பஸ் வல்லைச் சந்தியைக் [illegible] ருந்தபோது எதிரியானவர் தான் ஓட்டிவந்த பஸ்ஸினல் எனது பஸ்ஸின் பின்பக்கத் [illegible]

ஐ. நா. பாதுகாப்புசபைத் தீர்மானங்களை இஸ்ரேல் உதாசினம் செய்வதை பாதுகாப்புசபை வெகுவாகக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றது.

முஸ்லிம் நாடுகள் தாக்கல் செய்தஇந்தத்தீர்மானத்தை ஆதரித்து 11 நாடுகள் வாக்களித்தன. அமெரிக்கா, பின் [illegible]பியா ஆகிய நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

ஜெருசலத்தை இஸ்ரேல் தனது வசமாக்கிக்கொள்ள எடுத்துவரும் முயற்சிகளையும் பலநாடுகள் பாதுகாப்பு சபையில் கண்டித்தன

பாதுகாப்புசபை நிறைவேற்றும் தீர்மானங்களை [illegible] வேளையில் மேற்கொண்டும் முறையற்ற செயல்களைமேற்கொள்ள வேண்டாம் என்று பாதுகாப்புச்சபைத் தீர்மானம்இஸ்ரேலைவற்புறுத்தியது

ஜெருசலத்தின் அந்தஸ்தை மாற்றிவிட இஸ்ரேல் முனைவதாகவும் பாதுகாப்புசபை கண்டித்தது.

# பிரதமர் இந்திராவுக்கு எதிராகச் சத்தியாக்கிரகம்செய்யயோசனை

## மொரார்ஜிவற்புறுத்துகிறுர்

பம்பாய்,செப் 16

கட்சிக் கட்டுப்பாட்டை மீறிய தவறைச் செய்ததாக பிரதமமந்திரி திருமதி இந்திரா காந்தி ஒப்புக் கொள்ளவில்லையானுல் சத்தியாக்கிரகத்தின் மூலம் அவர் தமது தவறை ஒப்புக்கொள்ளுமாறு செய்யவேண்டும் என்று திரு மொரார்ஜி தேசாய் கூறினுர்.

கூட்டமொன்றில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு சொன்னுர். இக் கூட்டம் பம்பாய் பிரதேச காங்கிரஸ்கமிட்டியினுல் ஏற்பாடு செய்யப்பட்டது.

எம்மாதிரி சத்தியாக்ரஹ முறையை அனுஷ்டிக்கலாம் என்பதைப்பற்றி நான் இப்போது சொல்வதற்கில்லை. திருமதி காந்தி சென்ற 45 தினங்களாக செய்த தவறுகளை ஒப்புக் கொள்ளும்படி செய்வதற்கு எம்மாதிரி சத்தியாக்ரஹம் செய்யலாம் என்பது பற்றி காங்கிரஸ்காரர்கள் சிந்திக்க வேண்டும். சத்யாக்ரஹம் எந்த முறையில் இருக்க வேண்டுமென்பது பற்றி நான் இன்னமும் சிந்திக்கவில்லை எனினும் ரஸ்தாவில் நடக்கும் சத்யாக்ரஹமாக இருக்காது. காந்திய பாணியில் இருக்குமென்று திரு. தேசாய் கூறினுர்.

திரு தேசாய் மேலும்பேசுகையில் சொன்னதாவது:- மகாத்மாகாந்தி தேசப் பிரிவினை யோசனையை முழுமூச்சுடன் எதிர்த்தார். நாட்டுக்குச் சுதந்திரம் கிடைப்பதில் 50 ஆண்டுகள் தாமதம் ஏற்படுவதாக இருந்தாலும் பிரிவினை கூடாது என்று அவர் சொன்னுர். எனினும் நாட்டைத் துண்டாட ஒப்புக் கொள்வதென காங்கிரஸ் காரியக் கமிட்டி முடிவு செய்து விட்டதால் அது கட்சியின் முடிவே என்று காந்திஜி சொன்னுர். அதற்கு இணங்க அம்முடிவை ஏற்றுக் கொண்டார்.

காரியக்கமிட்டியில் பார்லிமெண்டரி போர்டும் செய்யும் ஒவ்வொரு முடிவையும் கட்சிமெம்பர்கள் அப்படியே பின்பற்றி நடக்க வேண்டும். கட்சிக் கட்டுப்பாட்டைப் பேணிக் காக்க வேண்டும். இது ஜனநாயகத்திற்கு அத்தியாவசியமாகும்.

ஒவ்வொருஜனநாயகவாதியும் தனது கட்சியிடம் விசுவாசம் காட்டி நடந்து கொள்ள வேண்டும். கட்டுப்பாடு மீறப்பட்டால் அது காங்கிரசுக்கு மட்டு மன்றி எல்லா ஜனநாயக சக்திகளுக்கும் அபாயம் ஏற்படும்

ராஷ்டிரபதி தேர்தல் சம்பந்தமாக தமது யோசனையை கேட்காததின்மூலம் பார்லிமெண்டரி போர்டு பெங்களூரில் தம்மை அவமதித்து விட்டது என்று பிரதமமந்திரி சொன்னது பற்றி அவர் குறிப்பிட்டார் எல்லாவற்றையும் பிரதம மந்திரியே முடிவு செய்வதாக இருந்தால் காரியக் கமிட்டியோ பார்லிமெண்டரி போர்ட்டோ தேவையே இல்லை.

பிரதம மந்திரி மீதும்மற்ற பெரிய தலைவர்கள் மீதும் காங்கிரஸ் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முடியவில்லையென்றல் சாதாரண ஊழியர்கள் மீது எப்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கமுடியும்

ராஷ்டிரபதி தேர்தலில் பிரதம மந்திரி வகுப்புவாத போக்கை மேற்கொண்டார் என்று மொரார்ஜி குற்றம் சாட்டினுர். காங்கிரஸ்அக்கிராசனர் மத்தியில் கூட்டு அரசாங்கம் ஏற்படுத்தும் சாத்தியக்கூறுகள் பற்றி ஜனசங்கம், சுதந்திரக்கட்சி இவற்றுடன் பேச்சு வார்த்தை நடத்தினுர் என்று மத்திய மந்திரிகள் மூலம் குற்றம்சாட்டினுர். முஸ்லீம்களையும். ஹரிஜனங்களையும் தங்கள் பக்கம் இழுத்து அவர்கள் திரு. கிரிக்கு வோட்டளிக்கும்படி செய்வதற்காக வேண்டுமென்றே கையாளப்பட்ட தந்திரமாகும். அதில் அவர் வெற்றி பெற்றுவிட்டார் என்று திரு தேசாய் கூறினுர்.

திரு. தேசாய் பேசுகையில் ஓர் ஊழியர் குறுக்கிட்டு காரியக கமிட்டி கூட்டத்தில் ஏன் அவர் பேசவில்லை என்று கேட்டார். கமிட்டி எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது, அது பலவீனமடைந்து விட்டது என்பதையே காட்டுகிறது என்றும் சொன்னுர்.

திரு. தேசாய் பதிலளிக்கையில் மிட்டி பலவீனமடைந்து விட்டால் கூட, அதை பலமுள்ளதாக்க வேண்டியது சாதாரண ஊழியர்களின் பொறுப்பாகும் என்று கூறினுர்

ஏன் காங்கிரஸிலிருந்து விலகவில்லை என்று பலர் என்னைக் கேட்கிறுர்கள் காங்கிரஸிலிருந்து விலகி, கட்டுப்பாட்டை மீறியவர்கள் அந்த ஸ்தாபனத்தை நிர்வகிக்கும்படி விடுவிட விரும்ப வில்லை என்றும் மொரார்ஜி கூறினுர்.

காங்கிரஸை உடைக்க யாராவது விரும்பினுல் அவர்கள் கட்சியை விட்டு வெளியேறி விட வேண்டும் என்றும் உள்ளேயிருந்து கொண்டு நாசவேலை செய்யக்கூடாது என்றும் அவர் கூறினுர்.

## குடைசாய்ந்தது

புலோலி, செவ்வாய்

வல்லிபுரக் கோவில் வீதியிலிருந்து நேற்று மண் ஏற்றி வந்த லொறியொன்று பருத்தித்துறை வீதியை நோக்கி வந்த பொழுது வயலினுள் குடைசாய்ந்தது. லொறியிலிருந்து வந்த பருத்தித்துறையைச் சேர்ந்த செல்லையா என்பவர் இவ்விபத்தில் காயமடைந்தார்.

யாக்கப்படுவது மட்டும் போதாது. அவை திறமையாகவும் செயற்பட வேண்டும் அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் அவை மூலம் [illegible]மை ஏற்படுவதாக இருக்க வேண்டும் என்று சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் கூறினுர்

'ஜனநாயக பொருளாதாரத்தின் பெயரில் எல்லாவற்றையுமே அரசாங்கம் எடுத்து நடத்த முனைந்திருக்கும் நமது நாட்டில், தனிப்பட்ட வியாபாரிகளும் தொழிலதிபர்களும் காந்திஜியின் தத்துவப்படி சொத்துக்களுக்கும் தொழில் திறன்களுக்கும் தம்மைத் தர்மகர்த்தாக்களாகக் கருதி அவற்றை நாட்டின் நலன்களுக்குப் பயன்படுத்தாவிடில், நமது நாட்டில் சர்வாதிகாரப் போக்கு உள்ள பொருளாதார முறை ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது' என்று பம்பாய் தொழில் நிர்வாகிகள் சங்கத்தின் ஆதரவில் உரை நிகழ்த்துகையில்திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் கூறினுர் அரசாங்கத்துறை தொழில்களை எடுத்துக் கொள்வோம். அந்தத் தொழில்கள் அரசுடைமையாக்கப்பட்டிருப்பது மாத்திரம் போதாது. அவை திறமையாக இயங்கி தமது அதிபர்களான அரசாங்கத்திற்கும், தமது ஊழியர்கள், ஸ்தல மக்கள், சமுதாயம் ஆகியோரின் நலன்களுக்காகவும் சேவை செய்ய வேண்டியது அவசியம். தொழில்களுக்கும் பல்வேறு தொழில் திறன்களுக்கும் அதிபர்களாக உள்ளவர்கள் சமுதாயத்தின் தர்மகர்த்தாக்களாக நடந்து கொள்ள வேண்டும் என்பதுதான் காந்திய தத்துவம் என்றுர் அவர்.

திரு ஜெயப்பிரகாஷ் நாராயண் மேலும் பேசுகையில், 'ஏற்கனவே அரசுடைமையாக்கப்பட்ட தொழில்கள், நிறுவனங்கள் முதலியவை காந்திய தத்துவப்படி தர்மகர்த்தா பொறுப்புடன் நடத்தப்படுகின்றனவா என்று கவனிக்க வேண்டியது அவசியம். இதைக் கவனிப்பதற்கு ஒரு மாதிரியான 'பொருளாதார பார்லிமெண்ட்' பேன்ற அமைப்பு மிகவும் அவசியம் காந்திய தத்துவப்படி அரசாங்கத்துறை தொழில்கள் திறமையாக இயங்குகின்றனவா என்பதையும் அவை பல்வேறு நலன்களைக் கருதி சேவை செய்கின்றனவா என்பதையும் கவனிக்க வேண்டியது அவசியம்.'

[illegible] பின்பற்ற வேண்டும்

ஜெயப்பிரகாஷ் நாராயண் மேலும் பேசுகையில். தனியார் துறையில்பல்வேறு தொழில்களுக்கும் நிறுவனங்களுக்கும் தொழில்திறன்களுக்கும் அதிபர்களாக உள்ளவர்கள் காந்திஜியின் தத்துவமாகிய 'தர்மகர்த்தா முறையை' ஏற்றுக்கொண்டு அதை அமுல் நடத்துவதற்கு ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். கிராமங்களில்கிராமதானம்இயக்கத்துடன் இந்தக் கருத்தும் பெரும் அளவில் பிரசாரம் செய்யப்பட்டும் அமுல்நடத்தப்பட்டும் வந்திருக்கிறது. நகர்ப்புற சொத்துக்கள் சம்பந்தமாக இந்தக் கருத்தை இன்னும் திறமையாகப் பிரசாரம் செய்து பார்க்கவில்லை 'சம்பாத்யதான' இயக்கமும் சிறிதளவுதான் நடத்திப் பார்க்கப்பட்டது. இந்த இயக்கத்திற்குக்கூட மக்களின் ஆதரவு போதுமானபடி இருக்கிறது.

தனியார் துறையினர் 'தர்மகர்த்தாக் கொள்கையை' அமுல் நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் அவர்கள் முதலில் தமது வீட்டை ஒழுங்காகவைத்துக்கொள்ள வேண்டும். சமூகநீதி ஏற்படுவதற்கு உதவியாகஇருக்கும் முறையில் தனியார் துறையினர் தமது தொழில்களை தர்மகர்த்தா முறை அடிப்படையில் ஒழுங்கு செய்து கொள்ள வேண்டியது அவசியம் அவ்வாறு செய்வதற்கான தருணம் வந்துவிட்டது

### அபாயகரமானது

'அரசாங்கத்திடம் அரசியல் அதிகாரமும் பொருளாதார சக்தியும் குவிவதைக் கண்டு எனக்கு மிகவும் சந்தேகம் ஏற்படுகிறது அரசியல் அதிகாரமும் தேசிய உடமை காரணமாக அதிகப்படியான பொருளாதார சக்தியும் ஒரே 'கையில்' சோஷலிசம் அல்ல. அதைச் சோஷலிசமாகவோ அல்லது [illegible] நான் கருதவில்லை. இந்த நிலைமையில்தான் அரசாங்கத்திடம் பொருளாதார சக்தி குவியாமல் பார்த்துக் கொள்வதற்குப் பொருளாதார பார்லிமெண்ட் போன்ற அமைப்புத்தேவை என்று யோசனை கூறினேன் என்றுர்.'

## புதிய மேயர் தெரிவு

காலி, செவ்.

காலி மாநகரசபை ஆணையாளர் திரு. ஏ. எச். ஏ. சாமி செப்டம்பர் 20-ம் திகதி மாநகரசபை அங்கத்தவர்கள் கூட்டமொன்றை புதிய மேயரைத் தெரிவு செய்வதற்காகக்கூட்டவுள்ளார்.

இதுகாலவரை மேயராக விருந்த டபிள்யு, டி. எஸ். அபே குணவர்த்தனு தனது பதவியை செப்டம்பர் 9-ம் திகதி ராஜினுமாச்செய்துள்ளார்.

## லொறிச்சாரதிக்கு 1 வருடம்கடூழியம்

மட்டுவில், செவ்வாய்

சாரதியின் அஜாக்கிரதை காரணமாகவே கோர விபத்து சம்பவித்தது என்று நிருபிக்கப்பட்டதைத் தொடர்ந்து, லொறிச் சாரதி ஒருவருக்கு 1 வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார், சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. ஸி. தருமலிங்கம்.

கீழ்க்கோர்ட்டில் பொய்ச் சாட்சியமளித்ததாக குற்றத்தை ஒப்புக்கொண்ட கிளீனர் செந்தில்வேல் என்பவர் எச்சரித்து விடுதலை செய்யப்பட்டார்.

1967-ம் ஆண்டு செப்டம்பர் 14-ம் திகதி இரவு பளைக்கு அருகாமையில் நடைபெற்ற ஒரு லொறி விபத்தில் கந்தையா பாலச்சந்திரன் என்ற வாலிபர் மரணமானது சம்பந்தமாக லொறிச்சாரதி தர்மராஜா என்பவருக்கு எதிராகப் பளை பொலிசார் வழக்கொன்றை தாக்கல் செய்தனர்.

## இன்று ஆண்டு விழா

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் வண்ணை கோசாவில் இளைஞர் சங்கத்தினரின் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழா இன்று மாலை வண்ணை கோசாவில் பிள்ளையார் ஆலய அரங்கில் திரு. கே. ஜெயரத்தினம் தலைமையில் நடைபெற விருக்கிறது.

திருவாளர்கள் வி. ஏரம்பமூர்த்தி, இரா. பீதாம்பரம் ஆகியோர் உரையாற்றுவர். யாழ். கலா க்ஷேத்திர மாணவிகளின் நடனமும், கலாவிநோதன் கே: என் கணபதிப்பிள்ளையின் வில்லுப் பாட்டும், கலாலயா குழுவினரின் மெல்லிசைக் கச்சேரியும், வண்ணை கலைவாணர் நாடக மன்றம் அளிக்கும் 'உடையார்' என்ற நாடகமுட்பட மற்றும் பல நிகழ்ச்சிகளும் விழாவில் இடம் பெறும்.

[illegible] யம் விளைவித்ததாக பருத்தித்துறைப் பொலிசாரால் [illegible] பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டபோது எதிரியான கந்தையா குற்றத்தை ஒப்புக் கொள்ளவே மாஜிஸ்திரேட் அவரது கை அடையாளம் கொடுக்கும்படிஉத்தரவிட்டு தீர்ப்புக்கூறுவதைஇம்மாதம் 29-ந்திகதிக்கு ஒத்திவைத்தார்.

## ரூ. 125 அபராதம்

வல்வெட்டித்துறை, செவ்.

பயங்கரமான முறையில் லொறியில் பொருட்களை ஏற்றியதுடன், 4 பேரை மேலதிகமாகவும் ஏற்றிச் சென்றதாகப் பொலிஸாரால் குற்றஞ்சாட்டி மா. நாகமுத்து என்பவர்மீது தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட மாஜிஸ்திரேட் அவருக்கு 125 ரூபா அபராதம் விதித்தார்.

## எம். பி. முயற்சி

உடுப்பிட்டி, செவ்வால்

உடுப்பிட்டித் தொகுதியில் வேலையற்றிருக்கும் வாலிபர்கட்கு வேலை வாய்ப்புப் பெற்றுக் கொடுப்பதற்கான திட்டம்ஒன்றை உபசபாநாயகரும். உடுப்பிட்டி எம். பியுமான திரு. மு. சிவசிதம்பரம் மேற்கொண்டு வருவதாக அறியப்படுகிறது

இம்புதிய திட்டத்தின் கீழ் சிறுபான்மைசமூகத்திலுள்ள படித்த வாலிபர்களுக்கு முக்கிய இடம் கொடுக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது. அத்துடன் உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள நிலமற்ற தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு காணி சுவீகரிப்புத்திட்டத்தின் கீழ் குடியிருக்கக் காணிகள் பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் உடுப்பிட்டி எம். பி. துரிதமாக ஈடுபட்டுள்ளார்.

## உற்சவம்

புலோலி, புதன்

துன்னலை வடக்கு சகாய மாதா ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகிறது கடைசி நாள் அன்று விசேஷ பூசைகளும் அன்னதானமும் நடைபெறும்.

''நான்செலுத்திச் சென்ற பஸ் வல்லைச் சந்தியைக் [illegible] ருந்தபோது எதிரியானவர் தான் ஓட்டிவந்த பஸ்ஸினுல் எனது பஸ்ஸின் பின்பக்கத்தில்மோதவிட்டார். அதனுல் எனக்குக்காயம்ஏற்பட்டதும் மயக்கம் அடைந்தேன்''

பருத்தித்துறைபஸ் டிப்போவைச் சேர்ந்த சாரதியான சிவகுரு கனகரத்தினம் என்பவர் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. விக்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினுர்.

இவ்வழக்கு உரும்பராய் பஸ் டிப்போவைச் சேர்ந்த பஸ் சாரதியான த. சுப்பிரமணியம் என்பவர் 67-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 24-ம் திகதி பருத்தித்துறை பஸ் டிப்போவைச் சேர்ந்த சி. கனகரத்தினம் ஓட்டிச் சென்றபஸ்சுடன்மோதியும், பிரயாணி சி. ஆறுமுகத்திற்கு பாரதூரமான காயம் விளைவித்தும் வேகமாக ஓட்டிச் சென்றதாகவும் வல்வெட்டித்துறைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டி தொடரப்பட்டது.

ச. கணபதிப்பிள்ளை சாட்சியமளித்த பின் மேல்விசாரணை அடுத்த மாதம் 7-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## புயலினுல் சேதம்

நுவரெலியா, செவ்.

திடீரென ஏற்பட்ட கடும் புயலினுல் வலப்பனைப் பகுதியிலுள்ள 40க்கு மேலான வீடுகள் அழிந்தன. இது மட்டுமன்றி இரு பெரிய நெசவுநிலையங்களின் கூரைகள் முற்ருகக் காற்றினுல் அகற்றப்பட்டுள்ளன.

வீடுகள் அழிந்ததினுல் பாதிக்கப்பட்ட மக்கள் யாவரும் தங்கள் இனத்தவர்களின் வீடுகளில் சென்றுதங்கியுள்ளார்கள், நுவரெலியா அரசாங்க அதிபர் திரு. பி. எம். விஜயகூன் இதுசம்பந்தமாக சமூகசேவைகள் அதிபருக்கு உடனடியாகத் தெரிவித்துள்ளார்.

## 8-வது தடவையாக தலைவர்

கோட்டை, செவ்வாய்

இலங்கை முதலாளிகள் சம்மேளனத்தின் தலைவராக 8 வது தடவையாக திரு. மணி. இ. விஜேசிங்கி தெரிவு செய்யப்பட்டுள்ளார். சம்மேளனத்துக்கு இவர் ஆற்றிய சேவை திரும்பவும் இவருக்குத் தலைமைப்பதவியைக் கொடுத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு
சத்தியத்தையும் அன்பையும் உபாசிப்பவன்
நாளைக்காக ஒன்றும் சேமித்து வைக்கமாட்டான்.
— மகாத்மாகாந்தி

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் புரட்டாதிமாதம்
1-ந் திகதி (17 - 9 - 69)

## வேலைவாய்ப்பும் சிங்களமும்

வேலையில்லாப் பிரச்னைக்கு பல காரணங்களுண்டு. உலகத்திலே அநேகமாக எல்லா நாடுகளிலும் இப்பிரச்னை உள்ளது. சிறப்பாக அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில்தான் இது அதிகமாகவுள்ளது. இப் பிரச்னையால் இந்தியாவும் இலங்கையும் மிகவும் அவதிப்படுகின்றன. இலங்கையைப் பொறுத்தவரையில் இப்பிரச்னை நாட்டின் பல பகுதிகளையும், எல்லாச் சமூகங்களையும் பாதிக்கின்றது. பொதுவாக இலங்கையில் வேலையில்லாப் பிரச்னை என்பதற்கு, எவ்வித பதவியோ தொழிலோ இல்லாமை என்பதே பொருளாகக் கருதப்படுகின்றது. வேலையற்றவர்களில் சிலருக்கு ஜீவனத்துக்கு வழியிருக்கலாம். ஆனால் அவர்களில் பெரும்பாலோர் தாங்களும் தங்கள் குடும்பத்தாரும் ஜீவனம் நடத்தவும் முடியாமல் தவிக்கவேண்டியிருப்பதால்தான் இந்தப் பிரச்னை அதிக ஆபத்தாகவும், அவசரமாகத் தீர்க்கப்படவேண்டிய ஒன்ருகவுமுள்ளது.

ஈழத்திலே தமிழர்களிடையே மட்டுமன்றி சிங்களவர்களிடையேயும் வேலையில்லாமல் சங்கடப்படுபவர்கள் உள்ளனரென்பதை மறப்பதற்கில்லை. தமிழர்களுக்கு நிலம் குறைவாக இருப்பதாலும், விவசாயம், கைத்தொழில் முதலியவை மூலம் கிடைக்கும் வருவாயும் மட்டாக இருப்பதாலும், வேலையில்லாப்பிரச்னையால் இங்கு தமிழருக்கு அதிக சங்கடம் ஏற்படுவதாக இருக்கின்றது. இலங்கை காலனி நிர்வாகத்திலிருக்கையில்தமிழர்கள் பொதுவாக அரசாங்க உத்தியோகத்தையே வெகுவாகநம்பி வாழ்ந்தனர். அரசாங்கசேவையில், வேலை நிரந்தரம், பென்ஷன் முத[illegible] களுமுள்ளதுடன், சமூகத்தில் செல்வாக்கும் மதிப்பும் அளிப்பதாக இருந்தது [illegible]

சேர்ந்து ஒத்துழைத்துள்ளனரென்பதும் குறிப்பிடத்தக்கது. நியாயமான தமிழ் உபயோகத்துக்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று இருப்பினும் காரியத்தில் ஒன்றுமில்லை.

இது எப்படியாயினும் சிங்களமே இப்போது நாட்டின் ஆட்சிமொழியாக இருக்கின்றதென்பதைப் பார்க்கின்றோம். ஆகவே அரசாங்கத்திலோ, கூட்டுத்தாபனங்களிலோ, அல்லது மறைமுகமாக அரசாங்க அதிகாரத்துக்குட்பட்ட ஸ்தாபனங்களிலோ தமிழர் வேலை வேண்டுமென்று ஆவல் கொண்டிருப்பின், சிங்கள மொழியில் தேர்ச்சியும், திறமையும் இருக்கவேண்டுமென்பது இன்றியமையாததாகின்றது. இது மறுக்க முடியாத உண்மை. இதை மூடி மழுப்புவதற்கில்லை. இவ்விதமான நிலையில் அரசாங்கவேலை பெறுவதற்கோ அல்லது அரசாங்க சம்பந்தமுள்ள ஸ்தாபனங்களில் வேலைபெறுவதற்கோ சிங்களம் படிக்கத்தேவையில்லை என்று யாரும் கூறின் அது கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை என்பதுபோலாகும்.

மொழி உரிமைக்காகத் தமிழர் போராடுவதென்பது வேறு. இன்று அரசாங்கத்திலே வேலைபார்த்து வேலையில்லாப்பிரச்னையைத் தீர்த்துக்கொள்ள விரும்புவது வேறு. இரண்டும் ஒன்றல்ல. சிங்கள மொழியை கற்பதால் தமிழருக்கு வேலைவாய்ப்பு அதிகரிப்பது ஒருபுறமிருக்க நாட்டிலே நட்பான சூழ்நிலையை ஏற்படுத்தி, அதன் அடிப்படையிலே தங்கள் எதிர்கால சுபீட்சத்துக்கும் உதவி செய்துகொள்வதாகும்.

இந்நிலையில் சிங்களவர் தமிழ்மொழியைக் கற்றால்தான் தமிழரும் சிங்[illegible] மென்று வற்புறுத்துவது அநாவசியமாகும். இதற்குப் பலகாரணங்களுண்டு. இன்று [illegible]

# கமிஷன் நியமிக்கப்பட்டாலும் பல்கலைக்கழகம் கிடைத்துவிடுமா?

## கட்சிப் பூசல்களினல் தமிழர் அனுபவித்தபலன் போதும்

நாட்டை இருள் சூழச்செய்யவும் ஒளி வீசச்செய்யவும் தொழிலாள வர்க்கத்துக்குச் சக்தியிருக்கிறதென்பதை ஓர் இரவு மட்டும் மின்சார இலாகா ஊழியர் நடத்திய அடையாளவேலை நிறுத்தம் நிரூபித்திருக்கிறது தொழிலாளவர்க்கத்தின் சக்தியை பிறர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முனைவதும் இந்தச் சக்தி துஷ்பிரயோகப்படுத்துவதும் தான் சில சயமங்களில் தொழிலாளருக்கு மட்டுமல்ல நாட்டுக்கே தீங்காக முடிவடைந்துவிடுகிறது.

மின்சார ஊழியர் வேலைநிறுத்தம் செய்ததும் அவசர அவசரமாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. நள்ளிரவு வரை மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் நடந்த இந்தப் பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முடிவடைந்தன காணி நீர்ப்பாசன அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எம். ஸ்ரீகாந்தாவும், மின்சார சபைத் தலைவர் திரு அஸீஸும் இப்பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக நடத்தினர். மின்சார ஊழியரின் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தையை முடித்துக்கொண்டு வேலைக்குத் திரும்புவதாக உறுதியளித்து வெளியே வந்தபோது அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதையும் இராணுவம் மின்சார நிலையங்களைப் பாதுகாக்கப் புறப்பட்டிருப்பதையும் அறிந்துசொள்ளவில்லை. ஞலும் அடுத்த நாள் காலை இருள் சூழ்ந்திருந்த இடங்களிலெல்லாம் ஒளி வீசத்தொடங்கின.

மின்சார இலாகா ஊழியரின் வேலைநிறுத்தம் முடிவடைந்துவிட்டது. ஆனலும் பெட்ரோலியம் கூட்டுத்தாபன ஊழியர் அத்தியாவசிய சேவைப்பிரகடனத்தையும் உதாசீனம் செய்து வேலைநிறுத்தத்தைத் தொடர்ந்துநடத்துகின்றனர். தங்களுடைய கோரிக்கைகளைத் தேசியமய சேவைகள் அமைச்சரும் பெட்ரோலியம் கூட்டுத்தாபன நிர்வாக[illegible] யாக' எடுத்துக்கொண்டிருப்பதாக பெட்ரோலியம் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த [illegible]

டுத்தாபனம், கூட்டுறவு மாகாண வங்கி ஊழியர்கள் வேலைநிறுத்தம்செய்துவருகின்றனர். பேச்சுவார்த்தைகள் இதுவரை பயனளிக்கவில்லை. தொடர்ந்து பேச்சுவார்த்தைகளுக்கான முயற்சிகள் நடைபெறுவதாகவும் தெரியவில்லை. பெட்ரோல், எண்ணெய் தட்டுப்பாடில்லாதவகையில் இராணுவம் சேவைசெய்துவந்தால் வேலைநிறுத்தம் தோல்வியில் முடிவடையக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகலாம் இதற்குத் தொழிற்சங்கங்கள் விட்டுக்கொடுக்கத் தயாராக இருக்க முடியாது பெட்ரோலியக் கூட்டுத்தாபன ஊழியரின் வேலைநிறுத்தத்துடனேயே இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியரும் வேலைநிறுத்தம் செய்யக்கூடுமென்ற அச்சம் ஏற்பட்டு அவர்களுடைய லீவுகள் யாவும் ரத்துச்செய்யப்பட்டிருந்தது. ஆனலும் பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் மீன்பிடிக் கூட்டுத்தாபனம் ஆகியவைகளின் வேலைநிறுத்தம் தோல்வியடையும் நிலை ஏற்படுமானல் இ. போ. சபை மற்றும் கூட்டுத்தாபனங்கள் அரசாங்க சேவை ஊழியர்கள் ஆகியோரின் தொழிற்சங்கங்களையும் சேர்த்து பொது வேலைநிறுத்தமொன்றுக்குத் தயார் செய்வதற்கான முயற்சிகளும் நடைபெறுகின்றன. இந்தவேலைநிறுத்தங்கள்ஒரு பலப் பரீட்சைக்கான கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்றன. வேலைநிறுத்தங்களை எதிர்க்கட்சியினர் சிலர் ஆதரித்தபோதிலும் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டது. அவர்களுக்கு அவ்வளவு மகிழ்ச்சியளிப்பதாக இல்லை. அடுத்த பொதுத்தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கும் இச்சமயத்தில் அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதால் நிலைமை மோசமாகக்கூடிய சம்பவம் எதுவும் நிகழ்ந்து அவசரகாலநிலையும் நீடிக்கப்பட்டால் தேர்தல் இப்போதைக்கு நடவா[illegible] விடுமோ [illegible] இந்த அரசாங்கம் வேலைநிறுத்த நிலைமையைச்சாட் [illegible]

தையோ ஆதரவையோ பெறத்தவறிவிட்டன.

0 0 0

### பல்கலைக்கழகம்

தமிழ்ப் பல்கலைக்கழகமோ இந்துப் பல்கலைக்கழகமோ இப்போதைக்கு அதாவது இந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் தமிழர்களுக்குக் கிடைக்கப் போவதில்லை என்பது நிச்சயமாகிவிட்டது. கல்வி அமைச்சின் மான்யம்மீதான விவாதத்துக்குப் பதிலளிக்கையில் கல்வி அமைச்சர் இதைத் தெளிவாகத் தெரிவித்துவிட்டார். ஒரு கமிஷன் நியமித்து எந்த அடிப்படையில் எந்த இடத்தில்எப்படியான பல்கலைக்கழகம் அமைப்பதென ஆராய்ந்து அதன்பின்னரே பல்கலைக்கழகம் அமைப்பதென்பதுபற்றித் தீர்மானிக்கப்படுமாம்.

புலவர் கோவிந்தன்யாழ்ப்பாணத்தில் சொன்ன 'எருதுகளின் கதை' சரியாகிவிட்டது. தமிழ்ப் பல்கலைக்கழகம் என்று தமிழரசாரும் இந்து பல்கலைக்கழகம்என்று காங்கிரசாரும் சர்ச்சை செய்து கொண்டிருந்தது மட்டுமல்ல திருக்கோணமலை

**- எஸ். எம். ஜி. -**

யில்தான் அமைக்க வேண்டுமென்று அவர்களும் இல்லை யில்லை யாழ்ப்பாணத்தில் தான் அமைக்க வேண்டுமென்று இவர்களும் பொது மேடைகளிலும் பத்திரிகைகளிலும் 'வாதாட்டம்' செய்து வந்ததன் பயன் 'ஒன்றுமே இல்லை' என்று அரசாங்கம் நாமம் போட்டுவிட்டதுதான். 'என்னலை நீ கெட்டே உன்னலை நான் கெட்டேன்' என்றபடி இந்தக் கட்சிப் பூசல்களினல் தமிழ் சமூகமே நிலைகெட்டு நிற்கிறது. இனியும் ஒருவர் மீது ஒருவர் பழி சுமத்தி வசைமாரி பொழிந்து கொண்டுதான் இருக்கப் போகிருர்களா?

பின்னையென்பதும் பிறகு [illegible] என்பார்கள். அது போலத்தான் கமிஷன் நியமித்து விசாரணை செய்து [illegible]

அந்தக் கமிஷன் அறிக்கையைச் செயற்படுத்த முன்வருமென்ருே தமிழ்ப்பகுதியில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்க முன்வருமென்ருே எதிர்பார்க்க முடியுமா? வேறு அரசாங்கம் வந்தாலும் இதைச் செய்துகொடுக்குமா?

இந்துக் கலாசாரப் பல்கலைக்கழகம் அமைப்பதாக சிம்மாசனப் பிரசங்கத்தில் தெரிவித்திருந்த சிறிமா அரசாங்கமும் மாவட்டசபைகள் அமைத்துத் தருவதாகவும் தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவித் தருவதாகவும் தமிழரசாருக்கு வாக்குறுதியளித்த இன்றைய அரசாங்கமும் அவற்றை நிறைவேற்றிக் கொடுத்தனவா? இனிமேலும் அவை இவற்றைச் செய்து கொடுக்கக்கூடும் என்று எதிர்பார்ப்பதற்கு என்ன நியாயமிருக்கிறது?

### துணைவேந்தர் நியமனம்

கொழும்பு பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிக்கு பேராசிரியர் ஏ. டபிள்யு. மயில்வாகனத்தின் பெயரைச் சிபார்சு செய்வதற்கு தேசிய உயர்கல்விச்சபை மறுத்துவிட்டது. இந்தச் சபையின் செயலைத் தட்டிக் கேட்பதற்கும் ஆள் இல்லை. உயர் கல்விச்சபை செய்துவரும் உதவியைக் கெடுதிதான் அதிகம் என்பதைப் பலரும் எடுத்துச் சொல்லி இருக்கின்றனர். ஆனலும் அமைச்சருக்கு அந்தச் சபையைக் கலைத்துவிடும் நோக்கமோ விருப்பமோ கிடையாது. போகட்டும். துணைவேந்தர் பதவிக்கு ஆற்றலும் அனுபவமும் தகுதியும் நிறைந்த பேராசிரியர் மயில்வாகனத்தைத் தெரிவு செய்யத் தவறியதன்மூலம் தேசிய ஐக்கியம் என்பது வெறும் உதட்டளவில்தான் உள்ள விஷயம் என்ற கருத்தை ஊர்ஜிதப்படுத்தியுள்ளது.

காலஞ்சென்ற நீதியரசர் தற்காலிக பிரதம நீதியரசராக இருந்த சமயம் தற்காலிககவர்னர்ஜெனரலாகவும் கடமையாற்ற வேண்டிய தொரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. அவருக்கு இந்த வாய்ப்பை அளிக்கக்கூடா[illegible]

ஆசிரியருக்கு கடிதம்

## நாவலரும் புலோலிசைவ பிரகாசவித்தியாசாலையும்

அண்மையில் புதிய கட்டடத் திறப்பு விழா நடத்தியதையொட்டி வெளியிட்ட மலரில், புலோலியில் நாவலரால் தொடக்கப்பட்ட இச் சைவப்பிரகாச வித்தியாசாலைப் பெற்றூர்-ஆசிரியர் சங்கச் செயலாளர் தவருன செய்திகளைத் தந்துள்ளார். நாவலரைப் பற்றியவை ஆதலால் அவை திருத்தப்படவேண்டியவை:

நாவலர் இப் பாடசாலையை 1872 ஆம் ஆண்டுக்குச் சமமான ஆங்கீரசு ஆண்டு தொடக்கி வைத்தார், 1875 ஆம் ஆண்டு தொடக்கப்பட்டது என்பது தவறு.

நாவலர் இப்பாடசாலைக்கு ஒரு முறையல்ல மூன்று முறை வருகை தந்து பரீட்சை நடாத்தியுள்ளார். 1876, 1877 1878 ஆம் ஆண்டுகளில் பிரதி புரட்டாதி மாதம் பரீட்சை நடத்தியுள்ளார் 1875 இல் பாடசாலை தொடக்கப் பட்டிருந்தால் 1876 இல் பரீட்சை நடத்தியிருக்க முடியாது,

நாவலரே உள்ளூர் வாசிகள் உதவியுடன் இப்பாடசாலையை நிறுவினர் நாவலரை அடியொற்றி ஏனையோர் நிறுவினர் என்பது தவறு. 1862 ஆம் ஆண்டு பருத்தித்துறை சித்திவிநாயகர் கோவிலில், சிதம்பரத்தில் சைவப்பிரகாச வித்தியாசாலை நிறுவ நிதி கோரி ஒரு பொதுக் கூட்டம் நடத்திஞர். அப்போது பருத்தித்துறை வர்த்தகர்களும், புலோலி மேற்கு வர்த்தகர்களும் பொருளுதவி செய்தனர். இந்த உறவின் விளைவாக இந்தப் பாடசாலையும் அமைக்கப்பட்டது.

கிறித்துவ மிஷனரிகள் தங்கள் கல்விக்கூடங்களுக்கு மிஷன் பெயரையும் சேர்த்து பெயர் வைத்தனர். அவர்களை எதிர்த்து தேசிய கல்விக் கூடங்களை நிறுவிய நாவலர், தனது கல்விக் கூடங்களுக்கு ''சைவப்பிரகாச வித்தியாசாலை'' என்று பெயரிட்டார்.

ஆ. தேவராசன்
மேலைப் புலோலி,
பருத்தித்துறை

## "பௌத்த குருமார்களிடம் ஒற்றுமையில்லை"

நாவலப்பிட்டி, செவ்.

'பௌத்த குருமார்கள் அரசியலில் அதிகம் ஈடுபடுவதினல் தங்களிடையேயுள்ள ஒற்றுமையை இளந்துள்ளார்கள். இத்தகையதொரு நிலைமை தொடர்ந்து இருக்குமானல் பௌத்த சாசனம் மட்டுமன்றி சிங்கள ஜாதியே காலகதியில் அழிந்துவிடும்''

நம்புக்பிட்டியாவில் நடைபெற்ற புலத்கம சாசனரக்ஷக மண்டலயவின் கூட்டமொன்றில் பேசுகையில் வண. பியரத்திஞதேரோ மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் தேசிய அரசாங்கம் மகாசங்கத்துக்கும், பௌத்த மக்களுக்கும் நன்மை செய்யுமென எதிர்பார்த்தது வீணயிற்று எனவும் இந்த அரசாங்கத்தின் செயலால் பௌத்த சங்கம் ஆகியவற்றிற்குத் தீங்கே விளைந்துள்ளது எனவும் குறிப்பிட்டார்.

## வடபகுதி தலைமை ஆசிரியர்கள் அரசுக்கு ரூ. 2 லட்சம் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், புதன்

கடந்த நிதியாண்டில் வட மாகாணத்தில் பள்ளிக்கூட கட்டட வேலைகளுக்காக 5 லட்சம் ரூபாய்வரை ஒதுக்கப்பட்டிருந்தும் இதுவரை இரண்டரை லட்சமே செலவாகியுள்ளதாயும் அறியப்படுகிறது. எப்படியாயினும் இந்தமாத இறுதியுடன் முடிவடையும் நிதி ஆண்டுக்கு 3லட்சச் செலவைத்தாண்ட முடியாது என்று மேலும்,

## தற்கொலைமுயற்சி 18 மாத நன்னடத்தை

மல்லாகம், செவ்வாய்

கிணற்றில் பாய்ந்து தற்கொலை செய்ய முயன்றதாக தெல்லிப்பழை மேற்கைச் சேர்ந்த எஸ். காந்தலட்சுமி (வயது 19) என்ற இளம் பெண் மீது காங்கேசன் துறைப் பொலிசார் குற்றஞ்சாட்டியிருந்த வழக்கில்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உத்தியோகத்தையே மிகவு வாகநம்பி வாழ்ந்தனர். அரசாங்கசேவையில், வேலை நிரந்தரம், பென்ஷன் முத... களுமுள்ளதுடன், சமூகத்தில் செல்வாக்கும் மதிப்பும் அளிப்பதாக இருந்தது குறிப்பிடத்தக்கது. ஆங்கிலத்தை நன்கு கற்றிருந்ததால் தமிழர் காலனி ஆட்சியிலே அரசாங்கஉத்தியோகத்தில் பெரும் பதவிகள் வகித்து செல்வாக்குடன் வாழ முடிந்தது. அந்த நிலைமை இப்போது பெரிதும் மாறிவிட்டது.

சிங்களம் இலங்கையின் அரசாங்க மொழியாக்கப்பட்டுள்ளது. இதை தமிழ்த் தலைவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். தமிழ்பேசும் மக்களுக்கு மொழி உரிமை வேண்டுமென்றும், தமிழுக்கு அங்கீகாரம் அளிக்கவேண்டுமென்று கேட்டுவந்ததாயும், தமிழ்சமூகத் தலைவர்கள் சிங்களம் மட்டும் என்பதை ஒப்புக்கொண்டுள்ளனரென்பதையும் மறப்பதற்கில்லை. சிங்களத்தை ஆட்சிமொழிஆக்கியுள்ள இந்த அரசியல் அமைப்பிலே அவர்கள் ...

இந்நிலையில் சிங்களவர் தமிழ்மொழியைக் கற்றால்தான் தமிழரும் சிங்... மென்று வற்புறுத்துவது அனாவசியமாகும். இதற்குப் பலகாரணங்களுண்டு. இன்று இலங்கையிலே ஆட்சிமொழியாக இருந்துவருவது சிங்களம் மட்டுமே. நாட்டிலே பெரும்பான்மையோரால் பேசப்படுவதும் அந்த மொழியே. இந்த இரண்டாவது காரணத்தை மாற்றுவதற்கே இல்லை. தமிழுக்கு முன்பிருந்த சமஅந்தஸ்தை ஏற்படுத்த எல்லா முயற்சிகளையும் தமிழர் செய்வதாக இருப்பினும், சிங்களம்பேசும் மக்களின் சம்மதத்தின் மூலமே அவ்விதம் செய்வது சாத்தியமாகும். இதை நிறைவேற்றிக்கொள்ள சிங்கள மக்களின் நல்லெண்ணமும் ஒத்துழைப்பும் அவசியம் தேவைப்படும். ஆகவே சிங்கள மொழி படிக்கக்கூடாதென்று யாரும் இந்நிலையில் யோசனை கூறுவதாயின் அதற்குத் தமிழர் செவிசாய்ப்பது விவேகமாகாது.

யூதர்களால் அச்சுறுத்தப்பட்ட

# அரபுப் பிரதிநிதிகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு

## யு தாண்ட் உத்தரவாதம்

நியுயோர்க், செப்.16

ஐ. நா. சபை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் அரபு நாடுகளின் பிரதிநிதிகளுக்கு பூரண பொலிஸ் பாதுகாப்புகள் செய்துகொடுக்கப்படும் என்று ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் ஐ. நா பாதுகாப்பு சபைக்கு உறுதியளித்திருக்கிறார்.

ஐ நா. வில்கலந்துகொள்ள அரபு பிரதிநிதிகளுக்கு யூதத் தீவிரவாதிகள் விடுத்திருக்கும் எச்சரிக்கை குறித்தே இந்த உறுதிமொழியை யுதாண்ட் தெரிவித்திருக்கிறார்.

வெளிநாடுகளிலுள்ள யூத வர்த்தக நிறுவனங்களும், இஸ்ரேலிய பிரஜைகளும் தாக்கப்பட்டால் ஐ. நா. வி லுள்ள அரபுப் பிரதிநிதிகள் தாக்கப்படுவார்கள் என்று யூதத் தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்திருப்பதாக அவர்கள் பாதுகாப்பு சபையில் புகார் தெரிவித்திருந்தார்கள். ஐ. நா. வில் இருக்கும் அரபு நாடுகளின் பிரதிநிதிகளுக்கு அல்லும் பகலும் பூரணப்பொலிஸ்பாதுகாப்பு அளிக்க அமெரிக்க அதிகாரிகள் இணங்கியிருப்பதாக யுதாண்ட் தெரிவித்திருக்கிறார்.

---

## தம்பிரான் சுவாமிகள் பிரசங்கம்

யாழ்ப்பாணம், புதன்

சாந்தையர்மடம் கற்பக விநாயகர் கோவில் அலங்கார உற்சவம் கடந்த 15-ந் திகதி தொடங்கி நடைபெற்று வருகிறது. தீர்த்த உற்சவமான 25-ந் திகதி வரையான 11 தினங்களிலும் இவ்வாலயத்தில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகளின் கதாப் பிரசங்கம் இடம்பெறும். இன்று தம்பிரான்சுவாமிகள் 'கண்ணப்பர்' என்னும் பொருள் பற்றிப் பிரசங்கம் நிகழ்த்துவார்.

ஈழநாடு பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தேசியமய சேவைகள் அமைச்சரும் பெட்ரோலியம் கூட்டுத்தாபன நிர்வாக ... யாக' எடுத்துக்கொண்டிருப்பதாக பெட்ரோலியம் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த ஆறு யூனியன்கள் ஓர் கூட்டறிக்கையில் தெரிவித்துள்ளன. தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அவர்கள் அறிவித்துள்ளனர். இதேசமயம் இராணுவம், விமானப்படை, கடற்படை ஆகிய முப்படைப் பிரிவுகளும் பெட்ரோல், எண்ணெய், எரிபொருள் விநியோக வேலைகளைச் சிறப்பாகச் செய்துவருகின்றன. போக்குவரத்துச்சேவை தடைப்படவில்லை பெட்ரோலியம்கூட்டுத்தாபன ஊழியருக்கு முன்னரே மீன்பிடிக் கூட்டுத்தாபனம், ரயர் கூட் ...

நிகழ்ந்து அவசரகாலநிலையும் நீடிக்கப்பட்டால் தேர்தல் இப்போதைக்கு நடவா ... விடுமோ என்ற கவலையும் இந்த அரசாங்கம் வேலை நிறு[த்த] நிலைமையைச்சாட்டாக வைத்து அவசரகாலச் சட்டத்தின் பாதுகாப்பில் ஆட்சிபீடத்தில் சிக்காராக அமர்ந்துவிடுமோ என்ற அச்சமும் அரசியல் வட்டாரங்களில் நிலவுகிறது

ஆனாலும் கௌரவமாக ஒரு முடிவுகாண்பதற்கு அரசியல் கட்சிகள் முயற்சி மேற்கொள்ளத் தலைப்பட்டிருக்கின்றன. மின்சார ஊழியரின் ஒரு நாள் திடீர் வேலைநிறுத்தமும் பெட்ரோலியம் கூட்டுத்தாபன ஊழியரின் வேலை நிறுத்தமும் பொதுமக்களின் அனுதாபத் ...

# மட்டக்களப்பு கலை விழா இன்று நாளைய நிகழ்ச்சிகள்

மட்டக்களப்பு, புதன்

மட்டக்களப்பு பிரதேச கலாமன்றத்தினரால் நடாத்தப்படும் கலைவிழாவின் 2-ம் நாள் நிகழ்ச்சிகள் இன்று மாலை கலாநிதி சு. வித்தியானந்தன் (பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்) தலைமையில் ஆரம்மாகும். மாலை 5 மணிக்குபதலைமைப் பேருரையும், 5.15க்கு புலவர்மணி ஏ. பெரியதம்பிப் பிள்ளையின் சிறப்புரையும் நிகழும் 5.30 மணிக்கு மட்டக்களப்பு இளங்கதிர் நாடக மன்றத்தினரின் 'சிங்களத்துச் சிங்காரி' என்னும் நாடகமும், கரவெட்டி கிராமசேவையாளர் பகுதியைச் சேர்ந்த 'பூதத்தம்பி நாடகம்' என்னும் கூத்துட' 'கர்ணனின் கடைசி ஆசை' 'எல்லாளன் துட்டகைமுனு யுத்தம்', சுபத்திரா கல்யாணம்' ஆகிய நாடகங்களும் தொடர்ந்து நடைபெறும்.

### 18 9 69 நிகழ்ச்சி நிரல்

கலாநிதி சு. வித்தியானந்தன் தலைமையில் நடைபெறும் இன்றையநிகழ்ச்சிகளில் பிரதம விருந்தினராக தொழில் வீடமைப்பு அமைச்சர் ஜனாப் எம். ஏச். முகமது கலந்து கொள்ளுகிறார்

காலை 9 மணிக்கு கோட்டை முனைப்பாலத்திலிருந்து அண்ணாவிமார் ஊர்வலம் ஆரம்பமாகி மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தை சென்றடையும். 9.30 மங்கள இசை 9.45 வரவேற்புப்பா.

10.00க்கு தொழிலமைச் திரு முகம்மது அண்ணாவிமார் மாநாட்டை ஆரம்பித்து வைப்பார். தொடக்கவுரை: உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. பே. காசிநாதர் தலைமைப் பேருரை: கலாநிதி சு. வித்தியானந்தன்.

மட்டக்களப்புப் பிரதேச கலாமன்றத் தலைவர் திரு. தேவநேசன் நேசையா, மட்டக்களப்பு மாநகரசபை தலைவர் திரு. திசவீரசிங்கம், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

அண்ணாவிமாருக்கு பொன்னாடை போர்த்துக் கௌரவித்தல் அண்ணாவிமார் சார்பில் நன்றியுரை.

நூல்கள் வெளியீடு 'அறிவுறுத்த நாடகம்; இராம நாடகம்; நூல் ஆசிரியர் பண்டிதர் வி. சி. கந்தையாவை கௌரவித்தல்; உள்ளூராட்சிமன்றங்களின் சார்பில் நன்றியுரை.

### மாலை நிகழ்ச்சி

மாலை நிகழ்ச்சியில் 4மணிக்கு அரசாங்க அதிபர் தலைமையுரைநிகழ்த்துவார் திரு. சி. இராசமாணிக்கம் எம் பி, திரு. செ. இராசதுரை எம் பி, திரு. கே. டபிள்யூ. வேதநாயகம் எம். பி, ஜனாப் ஏ. எல். சின்னலெப்பை எம் பி. ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர்.

மாலை விவசாயப் போட்டி கலைவிழாப் போட்டிகளில் பரிசு பெற்றோருக்குதொழில் அமைச்சர் பரிசுகளை வழங்குவர். மாலை 6.30 மணிக்கு பல்கலைக்கழக மாணவர்கள் அளிக்கும் கலாநிதி வித்தியானந்தனின் 'இராவணேசன்' நாடகமும், நடிகமணிவைரமுத்துவின் நாடகமும் 'அப்பலோ' படக்காட்சியும் இடம் பெறும்.

கொண்டுதான் இருக்கப் போகிறார்களா?

பின்னையென்பதும் பிறகு என்பதும் இல்லையென்பதற்குச் சரி என்பார்கள். அது போலத்தான் கமிஷன் நியமித்து விசாரணை செ[ய்]து பல்கலைக்கழகம் அமைக்கும் என்ற அமைச்சரின் வார்த்தையும்.

1970ம் ஆண்டில் தேர்தல் நடைபெறும்வரை இந்தக் கமிஷன் நியமிக்கப்படுமா என்பது சந்தேகம். கமிஷன் நியமித்து அதற்குள் அறிக்கை கிடைக்குமா என்பதும் அறிக்கை கிடைத்தாலும் அதை உடனடியாக அரசாங்கம் செயற்படுத்துமா என்பதுவும் ஐயம். தேர்தல் முடிந்தபின் இந்த அரசாங்கம்தான் பதவிக்கு வரும் என்பது என்ன நிச்சயம். இந்த அரசாங்கம் தான் பதவிக்கு வந்தாலும் ...

தற்காலிக பிரதம நீதியரசராக இருந்த சமயம் தற்காலிககவர்னர்ஜெனரலாகவும் கடமையாற்ற வேண்டிய தொரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. அவருக்கு இந்த வாய்ப்பை அளிக்கக்கூடாதென்று அரசாங்கத்தில் எதிர்புக் கிளம்பியது அப்போது பிரதமராக இருந்த சேர் ஜோன் கொத்தலாவலை அந்த எதிர்ப்புக்களையெல்லாம் உதாசீனம் செய்தார். நாகலிங்கத்தாரையே தற்காலிக கவர்னர்ஜெனரலாகக் கடமையாற்றச் செய்தார். அதுமட்டுமல்ல நேருகொத்தலாவலை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதும் அந்தச் சமயத்தில்தான் சேர் ஜோன் கொத்தலாவலை துணிச்சல் மிகுந்தவர் என்பது நாடறிந்த விஷயம்.

சினிமா விமர்சனம்

# புதியபூமி

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு தவறாத டாக்டராக வந்து வெளுத்துவாங்குகின்றார், எம். ஜி. ஆர். கொள்ளைக்கோஷ்டியையும் விரட்டியடிக்கச்செய்கிறார். அத்துடன் நிற்காமல் ஜெயலலிதாவையும் காதலிக்கின்றார். வழக்கம்போல எம். ஜி. ஆர். மோதவேண்டிய இடத்தில் மோதி, புரள வேண்டிய இடத்தில் புரண்டு, நடிக்கவேண்டிய இடத்தில் நடித்திருக்கின்றார்!

கொலைவெறி பிடித்த காங்கேயன் என்பவனால் ஆட்டிப்படைக்கப்படும்கிராமம் ஒன்றை முன்னேற்றுவதில் ஈடுபட்டிருக்கும் டாக்டரை கிராமத்தினின்றும் அகற்றுவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது கொள்ளைக் கோஷ்டி ஒன்று. எவ்வித இன்னல்களையும், தாக்குதலையும் பெரிதாக மதியாத டாக்டர் தமது இலட்சியமான கிராமப்புற மக்களுக்கு வைத்திய வசதியளிப்பதிலிருந்தும் தவறவில்லை. தாக்குதல்களை எல்லாம் சர்வசாதாரணமாக எண்ணிக் கொள்ளைக் கோஷ்டியையே விரட்டியடிப்பதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளார்!

டாக்டராக வரும் கதிரவன் (எம். ஜி. ஆர்.) கொள்ளைக்கோஷ்டித் தலைவனை காங்கேயனை(நம்பியார்)யும், அசோகனையும் எல்லாத் தாக்குதலிலும் வெற்றிபெற்றுக், கிராமத்தை வளம் படுத்துவதிலேயே தீவிரமாக ஈடுபடுகிறார். எம். ஜி ஆரின் நடிப்பும் கொள்ளைக் கோஷ்டியினரின் நடிப்பும் பாராட்டத்தக்க முறையில் சிறப்பாக அமைந்துள்ளது.

விபத்துக்குள்ளாகிக் காட்டுப் பாதையில் கிடந்த தம்மைப் பாதுகாத்த ஜெயலலிதாவைக் காதலிக்கும் டாக்டரான எம். ஜி. ஆருக்கு அவள் கொள்ளைக் கோஷ்டித் தலைவனான நம்பியாரின் மகள் என்பது தெரியாது.

பயங்கர மோதல்களும் எம். ஜி. ஆர். - ஜெயலலிதா காதல் கட்டங்களும், ஆடல் பாடல்களும் ரசிகர்களை தம் வசப்படுத்திவிடுகிறது- புதிய பூமி!

தமாஷ் நடிகர் நாகேசுக்குக் கொடுக்கப்பட்ட பாத்திரத்தை மிகத்திறம்பட நடித்துள்ளார். பயங்கர மோதல்களுக்கிடையே திடீரெனத் தோன்றும் நாகேஷ் ரசிகர்களைப் பலமாக ரசிக்கவைத்துவிடுகிறார். குடும்பத்துடன் சென்று பார்க்கக்கூடிய திரைச்சித்திரம் புதியபூமி. இப்பொழுது யாழ்ப்பாணம் வின்சரில் ஓடிக்கொண்டிருக்கிறது.

சரித்திரப்புகழ்மிகு, வரலாறு காணாத சந்திரயாத்திரையும் காட்டப்படுகிறது.

— காசி

இரண்டரை லட்சமே செலவாகியுள்ளதாயும் அறியப்படுகிறது. எப்படியாயினும் இந்தமாத இறுதியுடன் முடிவடையும் நிதி ஆண்டுக்கு 3லட்சச் செலவைத்தாண்ட முடியாது என்று மேலும் அறியப்படுகிறது. அப்படியாயின் இந்த நிதியாண்டு ஒதுக்கீட்டிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய்களை அரசாங்கத்திடம் திருப்பி ஒப்படைக்க நேரும் என கூறப்படுகிறது.

பள்ளிக்கூடக்கட்டடவேலைகளை தலைமைஆசிரியரைக் கொண்ட பெற்றோர்ஆசிரியர் சங்கங்களிடம் ஒப்பந்த ரீதியில் ஒப்படைப்பது வழக்கமாம் தலைமைஆசிரியர்களும் பெற்றோர்-ஆசிரியர் சங்கங்களும்போதிய அக்கறைகாட்டாததால் அவர்களிடம் ஒப்படைத்த வேலைகளை அவர்கள்பூர்த்தியாக்காமல் போய்விட்டனர். எனவே பணம் மிஞ்சிவிட்டதாம்.

பாடசாலைத் தலைமைஆசிரியர்கள் கட்டட வேலைகளை உபஒப்பந்தத்தில் கொந்தராத்துக்காரரிடம்ஒப்படைப்பது வழக்கமாம். இப்படி ஒப்படைக்கையில், ஒதுக்கப்பட்ட தொகையில் என்ன விகிதாசாரம் தலைமைஆசிரியருக்குக்கிடைக்கும் என்று 'பேரம்' பேசிக்கொடுப்பதும் வழககமாம் அப்படிப் பேரம் பேசிக் காலம் கழித்தன் விளைவே இந்தக் கேடு என்று கல்வித் திணைகள வட்டாரங்களில் பேசப்படுகிறது. இதனால் அடுத்த ஆண்டு கிடைக்கக் கூடிய பணமும் வெகுவாகக் குறையும் என்ற அச்சமும் தெரிவிக்கப்படுகிறது.

## அச்சுவேலி சிறுவன் கொலை வழக்கு

### மீண்டும் ஒத்திவைப்பு

மல்லாகம், செவ்வாய்

அச்சுவேலி தம்பாலை கொலை வழக்கு தீர்ப்பு வழங்குவதை மீண்டும் மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி ஒத்திவைத்துள்ளார்.

காங்கேசன்துறைப் பொலிஸார் தம்பாலையைச் சேர்ந்த குமார் ஐயாத்துரை (வயது 9) என்ற சிறுவனை கொலைசெய்ததாக அதே இடத்தைச் சேர்ந்த ஆர் ஆனந்தராசா, எஸ். நாகேஸ்வரன் ஆகிய இருவருக்கு எதிராக இவ்வழக்கை தாக்சல் செய்துள்ளனர்,

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் எஸ். நடராசா ஆஜரானார். பொலிஸ் தரப்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் வழக்கை நடத்தினார்.

தெல்லிப்பழை மேற்கைச் சேர்ந்த எஸ். காந்தலட்சுமி (வயது 19) என்ற இளம் பெண் மீது காங்கேசன் துறைப் பொலிசார் குற்றஞ்சாட்டியிருந்த வழக்கில் எதிரி தமது குற்றத்தை ஒப்புக்கொண்டார். மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி பிரஸ்தாப இளம்பெண்ணை 18 மாத கால நன்னடத்தை பாதுகாவலில் செல்ல உத்தரவிட்டார்.

ஒரே கிணற்றில் பாய்ந்த நான்கு சகோதரிகளில் மூவர் மரணமடைந்து காப்பாற்றப்பட்ட இளம் பெண்மணியே இவ்வழக்கின் எதிரியாவார்.

## யாருடையது?

யாழ்ப்பாணம். புதன்

இம்மாதம் 4-ம்திகதிமாலை தபால் ரயில்வண்டியில் கண்டெடுக்கப்பட்ட பெண்கள் கைப்பைஒன்று கோண்டாவில் புகையிரத நிலையப் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அவரிடம் பெற்றுக் கொள்ளலாம்.


## காரைநகர் கிராமசபை கேள்வி விளம்பரம்

1. 1969-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 27ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9-30 மணிவரை இடைப்பிட்டி சத்திரந்தை ரோட்டு வேலைக்கு காரைநகர் கிராமசபை அக்கிராசனரால் அரக்குமுத்திரை வைத்த கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்-

2. இதன் பிரதி யாழ்ப்பாணம் உள்ளூராட்சிஉதவி ஆணையாளருக்கு அதேதிகதியிலும் அதே நேரத்திலும் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்,

3. கட்டுக்காசு ரூபா 85-00 (எண்பத்தைந்து) கட்டியதன்பேரில் கேள்விப்பத்திரங்கள் புரட்டாதி மாதம் 26-ம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 12 மணி வரை வழங்கப்படும்,

4, இது சம்பந்தமான விபரங்கள் யாவும் காரைநகர் கிராமசபை அலுவலகத்திலும் யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி அதிபர் கந்தோரிலும் பார்வையிடலாம்.

5. கேள்விப்பத்திரத்தின் கிரயம் ரூபா 5.00,

கா, க. விசுவலிங்கம்
தலைவர்
கிராமசபை, காரைநகர்.
கிராமசபை அலுவலகம்
காரைநகர், 16-9-69 1757


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org